பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | சித்திரை 17 திங்கட்கிழமை 30.04.2018 | கதிர் 175

## வெள்ளி இரவு மட்டும் பத்தாயிரம் பேரை மடக்கினர் பொலிஸார்

கொழும்பு, ஏப்.30

நாடு முழுவதிலும் கடந்த வெள்ளிக்கிழமை ஒரு நாள் இரவில் மட்டும் பொலிஸார் விரித்த வலையில் பத்தாயிரம் பேர் சிக்கினர் எனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இவர்களில் 2 ஆயிரத்து 630 பேர் கிரிமினல் குற்றங்கள் பக்கம் 14

# கூட்டமைப்புத் தலைமையிடம் போதிய செயற்றிறன் இல்லை!



## சாடுகிறார் வடக்கு முதல்வர் விக்கி

கொழும்பு, ஏப்ரல் 30

**"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமை போதிய செயற்றிறன் இன்றி உள்ளது. அந்தத் தலைமையில் உள்ளோர் கண்ணாடியில் தங்களைப் பார்க்கவேண்டும்."**

**- இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.**

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

*"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடனான உங்களின் உறவுகள் மோசமடைந்து வருகின்றன. வரப்போகும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தங்களின் முதலமைச்சர் வேட்பாளராக நீங்கள் இருக்கமாட்டீர்கள் என்று அவர்கள் அண்மையில் அறிவித்த பின்னர் அது இன்னமும் மோசமடைந்துள்ளது. இந்தப் பிளவுக்குக் காரணம் என்ன?"* – என்று ஊடகவியலாளர் பக்கம் 14

## புதிய அமைச்சரவை நாளை பதவியேற்பு

கொழும்பு, ஏப்.30

புதிய அமைச்சரவை நாளை முற்பகல் 10 மணியளவில் பதவியேற்கவுள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் இந்த அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வு இடம்பெறும்.

புதிய அமைச்சரவையின் முதலாவது கூட்டம், அநேகமாக அன்று மாலை பக்கம் 14

## ரணிலின் தலைமைப்பதவிக்கு ஐ.தே.கவில் போட்டியில்லை



### கூறுகிறார் அகில விராஜ்

கொழும்பு, ஏப்.30

ஐக்கியதேசியக்கட்சியின்தலைவர் பதவிக்குரணில்விக்கிரமசிங்கவுக்குப் போட்டியாகக் களத்தில் குதிக்கும் எண்ணம் எவருக்குமே இருக்கவில்லை என்று அந்தக் கட்சியின் செயலாளரான அமைச்சர் அகிலவிராஜ் காரிய வசம் கூறியுள்ளார்.

பக்கம் 14

## சிறுபான்மையினர், மகளிரை அடியோடு ஒதுக்கியது ஐ.தே.க.

### அரசியல் குழுவில் கதவடைப்பு

கொழும்பு, ஏப்.30

ஐக்கிய தேசியக் கட்சி தனது உயர் பீடமாகக் கருதும் அரசியல் குழுவுக்குப் புதிதாக ஆள்களை நியமித்துள்ளது.

ஆனால் அதில் தமிழரோ, முஸ்லிம்களோ – ஏனைய சிறுபான்மையினரோ – பெயருக்குக் கூட இல்லை.

மகளிருக்கும் கூட அதில் இடமளிக்கப்படவில்லை.

ஐ.தே.கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது கட்சியின் முக்கிய பக்கம் 14

## மதிய உணவுப் பொதி விலையும் அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.30

மதிய உணவுப் பொதியின் விலை 10 ரூபாவாலும், அப்பத்தின் விலை 2 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளளதாகச் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இந்த விலை அதிகரிப்பு இன்று முதல் அமுலுக்கு வருமென அந்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

லிட்ரோ மற்றும் லாவ் சமையல் பக்கம் 14

### இனி அது ரகசியம் அல்ல!

தமிழ் அரசியல் தரப்புக்கள் எல்லாம் *'வரட்டும் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள். ஒரு கை பார்க்கிறோம்.'* – என்று துடித்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால், அவர்கள் நிலைமை பரிதாபத்துக்குரியது. ஏனென்றால் மாகாண சபைத் பக்கம் 03

## தமிழக முகாமில் வசித்த இலங்கை யுவதி மாயம்

சென்னை, ஏப்.30

விழுப்புரம் மாவட்டம் – சின்னசேலம், இலங்கை அகதிகள் முகாமில் தங்கியிருந்த இளம் இலங்கைப் பெண்ணைக் காணவில்லை என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுச்சேரி, சந்தை புதுக்குப்பம் பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இலங்கைப் பெண்ணே பக்கம் 14

## உணவு விலைகளைக் கூட்ட இடமளிக்கப்படமாட்டாதாம்!

கொழும்பு, ஏப்.30

அரசாங்கம் எரிவாயு விலையை உயர்த்தியுள்ள நிலையில் அதனை ஒரு காரணமாகக் கொண்டு சிற்றூண்டிச்சாலை மற்றும் ஹோட்டல் உரிமையாளர்கள் அநீதியான முறையில் உணவுப் பொருள்களின் விலைகளை உயர்த்த இடமளிக்கப்படமாட்டாது என நுகர்வோர் விவகார அதிகாரசபை பக்கம் 14

## நாட்டின் பொருளாதாரம் மிகமோசமாக வீழ்ச்சியில்!

### மத்திய வங்கி புள்ளிவிவரம் தகவல்

கொழும்பு,ஏப்.30

பதினாறு ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆண்டில் மிகக் குறைந்த நிலையில் பதிவாகியுள்ளதாக இலங்கையின் மத்திய வங்கியின் ஆண்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் மத்திய வங்கியின் 2017ஆம் ஆண்டுக்கான அறிக்கை கடந்தவாரம் வெளியிடப்பட்டது. அதில், 2017ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 3.1 வீதமாக இருந்தது என்று கூறப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டில் 3.6 வீத பொருளாதார வளர்ச்சியை இலங்கையின் மத்திய வங்கி எதிர்பார்த்திருந்தது. எனினும், கடுமையான வறட்சி, பக்கம் 14

## இந்த அரசியல் மாற்றத்தினால் தமிழக்குப் பயனேதுமில்லை



### டக்ளஸ் விசனம்

யாழ்ப்பாணம், ஏப்.30

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தால் எமது மக்களுக்குச் சாதக நிலை ஏதுமில்லை என ஈழ மக்கள் பக்கம் 14

## யாழ். சிறையில் 6 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.30

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் 6 கைதிகள் பொதுமன்னிப்பில் விடு பக்கம் 14

காலைக்கதிர் Kalaikkathir


# புங்குடுதீவு இறுப்பிட்டி கிராமத்தின் அபிவிருத்திக்காக ஒன்றிணைந்து பாடுபடுவோம்; வேலணை பிரதேச தவிசாளர்

யாழ்ப்பாணம், ஏப். 30

பிரதேசங்களின் அபிவிருத்திக்கு அந்தந்தப் பிரதேசங்களில் இருக்கின்ற பொது அமைப்புகளின் பங்களிப்பு மிகவும் அவசியமானது.

அவ்வாறானதொரு கட்டமைப்புக்கள் உருவாகும் போதுதான் அபிவிருத்திக்காக காத்திருக்கும் கிராமங்கள் விரைவாக உயர்ச்சி காண முடியும் என வேலணை பிரதேச சபை தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அந்தப் பிரதேசத்தின் நிர்வாக செயலாளருமான நமசிவாயம் கருணாகர குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு இறுப்பிட்டி அபிவிருத்தி சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட அபிவிருத்தித்திட்ட ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அவர் தெரிவித்தவை வருமாறு: –

புங்குடுதீவு இறுப்பிட்டி பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்காக இப்பகுதியில் உள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கள் முன்னிற்பது மகிழ்ச்சியளிக்கின்றது. இந்த கட்டமைப்பை இந்தக் கிராமத்திற்காக உருவாக்கிய புலம்பெயர் தேச மக்கள் மிகவும் மதிக்கப்படுவதுடன் நன்றி கூறப்பட வேண்டியவர்களுமாவர்.

கடந்த காலங்களில் தீவகத்தின் குறிப்பாக வேலணை பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்தி பணிகளிலும் இந்தப்பகுதி இளைஞர் யுவதிகளுக்கான தொழில் வாய்ப்பு மற்றும் வாழ்வாதார முன்னேற்றத்துக்கும் என எமது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பல்வேறு திட்டங்களையும் அபிவிருத்திகளையும் பெற்றுக்கொடுத்திருந்தார்.





இதன் பயனாகவே இந்தப் பகுதிகளில் இன்று பல தேவைகளை மக்கள் இலகுவாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

ஆனாலும், முழுமையான அபிவிருத்திக்காக இன்னும் பல தேவைப்பாடுகளை இப் பகுதி வேண்டி நிற்கின்றதை அறியமுடிகின்றது.

அந்த வகையில் இக்கிராம அபிவிருத்திச் சங்கம் புலம்பெயர் தேசமக்களது ஆதரவுடன் தமது கிராமத்தின் அபிவிருத்திக்காக முன்னெடுத்தச் செல்லும் அனைத்து வேலைத் திட்டங்களுடனும் நாமும் இணைந்து அவர்களுக்கான தேவைப்பாடுகளையும் உதவித்திட்டங்களையும் பெற்றுக்கொடுத்து இக் கிராமத்தை வளமான பிரதேசமாக மாற்றுவதற்கு முழு ஒத்துழைப்பும் வழங்குவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இராணுவத்தினர் தலைமையில் வடக்கில் வெசாக் கொண்டாட்டம்!

யாழ்ப்பாணம், ஏப்.30

வட மாகாணத்தின் பல பிரதேசங்களிலும் இராணுவத்தினரின் தலைமையில் வெசாக் கொண்டாட்டங்கள் கோலாகலமாக நடைபெற்று வருகின்றன.

வடக்கில் நடைபெறும் வெசாக் கொண்டாட்டங்கள் வன்னிப் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி குமுது பெரேராவின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்று வருகின்றன.

வன்னி பெருநிலப் பரப்பின் பல்வேறு பகுதிகளிலும் இராணுவத்தினரின் வெசாக் அலங்கார பந்தல்கள் மற்றும் தோரணங்கள் உள்ளிட்டவை காட்சிப்படுத்தப்படுகின்றன.

யாழ்ப்பாணக் கோட்டை அருகிலும் இராணுவம், கடற்படை மற்றும் பொலிஸார் இணைந்து வெசாக் தோரணங்களை அமைத்துள்ளனர்.

இராணுவத்தினருடன் சேர்ந்து வடக்கில் வாழும் பௌத்தர்கள் மற்றும் தமிழ்ப் பொதுமக்களும் இந்தக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டுள்ளனர். (க)

## இலங்கையில் 16 ஆண்டுக்கு பின்னர் மோசமான நிலையில் பொருளாதாரம்

கொழும்பு, ஏப். 28

16 ஆண்டுகளுக்குப் பின்னர், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆண்டில் மிகக் குறைந்த நிலையில் பதிவாகியுள்ளது என இலங்கை மத்தியவங்கியின் ஆண்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் 2017ஆம் ஆண்டுக்கான அறிக்கை கடந்தவாரம் வெளியிடப்பட்டது.

அதில், 2017ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 3.1 வீதமாக இருந்தது என்று கூறப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் 3.6 வீத பொருளாதார வளர்ச்சியை இலங்கை மத்திய வங்கி எதிர்பார்த்திருந்தது.

எனினும், கடுமையான வறட்சி, இயற்கைப் பேரழிவுகளால் விவசாயம் மற்றும் தொழில்துறைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளால், பொருளாதார வளர்ச்சி மந்தமானது.

2001 ஆண்டுக்குப் பின்னர், மிகக் குறைந்த பொருளாதார வளர்ச்சி பதிவாகியது, 2017 ஆம் ஆண்டில் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

2001ஆம் ஆண்டு, போர் நடந்து கொண்டிருந்த கால கட்டத்தில், கட்டுநாயக்க விமான நிலையத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி விமானங்களை அழித்தமையாலும் சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டதாலும், பொருளாதார வளர்ச்சி மோசமான நிலையில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



## யாழ். மாணவியின் ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஏப். 30

கொழும்பு - சைவ மங்கையர் வித்தியாலய பழைய மாணவி அனந்தன் ஹம்சத்வனியின் ஓவியக் கண்காட்சி சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வுகள் சைவ மங்கையர் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இவர் யாழ்.பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானபீட முதலாம் வருட மாணவியாவார்.

இவருடைய கைவண்ணத்தால் உருவாகிய அழகிய சித்திரங்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில், அனைவரும் இந்த மாணவியைப் பாராட்டியுள்ளனர்.

## தனியார் துறையினரையும் இலஞ்ச ஊழல் தடுப்பு சட்டத்தினுள் உள்வாங்க நடவடிக்கை

கொழும்பு, ஏப். 30

தனியார்துறை நிறுவனங்கள் மற்றும் ஊழியர்களையும் இலஞ்ச ஊழல் தடுப்புச் சட்டத்தினுள் உள்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போதைய நிலையில் தனியார் துறை ஊழியர்களுக்கு எதிராக இலஞ்ச ஒழிப்புச் சட்டங்களின் பிரகாரம் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் தனியார் துறை ஊழியர்கள் இலஞ்சம் வாங்கினால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் வகையில் இலஞ்ச, ஊழல் ஒழிப்புச் சட்டம் திருத்தப்படவுள்ளது.

இத்தகவலை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் 85 பேருக்கு எதிராக தொடுக்கப்பட்ட இலஞ்ச வழக்குகளில் 52 பேர் குற்றவாளிகளாக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று இந்த வருடம் இதுவரையான காலப்பகுதிக்குள் 32 பேருக்கு எதிராக இலஞ்ச ஊழல் சட்டங்களின் கீழ் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன என்றும் சரத் ஜயமான்ன மேலும் தெரிவித்துள்ளார்.

### வெசாக் பண்டிகையை முன்னிட்டு

## வவுனியா முழுவதும் கொடிகள், கூடுகள்!





கொழும்பு, ஏப். 30

வெசாக் பண்டிகையை முன்னிட்டு வவுனியா நகரம் முழுவதும் கொடிகள், வெசாக் கூடுகள் தொங்க விடப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்ட செயலகத்திலும் வெசாக் பண்டிகைக்குரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பொலிஸார், இராணுவத்தினரின் ஏற்பாட்டில் பிரதி பொலிஸ் மாஅதிபரின் அலுவலத்திலிருந்து வவுனியா நகர் வரை கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளமையுடன் வெசாக் தோரணங்கள் வீதியின் இரு மருங்கிலும் தொங்க விடப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்ட அரச அதிபரின் வாசஸ்தலத்திற்கு அருகே பெரிய அளவிலான வெசாக் தோரணங்கள் செய்யும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

தமிழர்கள் செறிந்து வாழும் இடமான வவுனியா நகரம் பெரும்பான்மை மக்களின் கைகளுக்கு மாறி செல்கின்றமையை இந்தக் காட்சிகள் எடுத்து இயம்புகின்றன என சமூக ஆர்வலர்கள் குறிப்பிட்டுள்ளனர். (க)

# நேற்று யாழ். நகரில் ஆரம்பமான வெசாக் நிகழ்வுகளின் போது...











## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல்கள் நாட்டில் இனி அண்மைக்காலத்தில் நடைபெறுவதற்கே சாத்தியமில்லை என்றும், நாடாளுமன்றத்தை முடக் கிய ஜனாதிபதியின் நடவடிக்கை அதற்கு நிரந்த சட்ட ஆப்பை வைத்து விட்டது என்றும் விடய மறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதனை நீங்கள் புரிந்து கொள்வதாயின் சற்று விவர மாகவும், விளக்கமாகவும் இதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

கடந்த வருடம் மூன்று மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவடையும் தறுவாயில் அடுத்த தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிடத் தேர்தல் ஆணையம் தயாரானது.

ஆனால், அதை அந்தக் கட்டத்தில் தடுப்பதற்கு முயன்ற 'நல்லாட்சி அரசு', மாகாண சபைத் தேர்தல் முறைமையையே மாற்றியமைக்கப் போகிறோம் எனத் தெரிவித்து, அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தைக் கொண்டு வந்தது. ஆனால், தற்போது நடைமுறையில் உள்ள மாகாண சபைகளின் தேர்தலை இந்தச் சட்ட மூலம் தள்ளிப்போடுவதால், அதைச் சட்டமாக்குவதற்கு முதலில் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் ஆணை – அனுமதி – பெறவேண்டும் என அறிவித்தது உயர்நீதிமன்றம்.

அதனை உடனே செய்ய முடியாது என்பதை உணர்ந்த நல்லாட்சி அரசு, பிரகடனப் படுத்தப்பட இருந்த அந்த 3 மாகாண சபைகளுக்குமான தேர்தல்களையும் கடைசி நேரத்திலாவது தடுப்பதற்கு அவசர அவசரமாகப் புது வழி ஒன்றை தேடிக் கண்டு பிடித்தது.

மாகாண சபைகளில் பெண்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவத்தை வழங்கவேண்டும் என்றநோக்கில் ஏற்கனவே நாடாளுமன்றில் பிரேரிக்கப்பட்டு, நீண்ட காலம் கிடப்பில் போடப்பட்டிருந்த சட்டமூலத்தை அது தோண்டிக் கையில் எடுத்தது. அவசர விவாதத்துக்க அதை நாடாளுமன்றுக்குக் கொண்டு வந்தது.

அந்த சட்டமூலத்தின் இரண்டாம், மூன்றாம் வாசிப்பின்போது அதனை முழுமையாகவே – தலைகீழாகவே – மாற்றியது. இப்படி ஒரு சட்டமூலத்தை இரண்டாம், மூன்றாம் வாசிப்பின்போது முழுமையாக, தலைகீழாக மாற்றுவது நாடாளுமன்றச் சம்பிரதாயமல்ல. அதையும் மீறி நல்லாட்சி அரசு அதனைச் செய்தது.

மாகாண சபைத் தேர்தல்களின் உறுப்பினர் தெரிவை இனிமேல் ஐம்பது விகிதம் தொகுதி வாரியாகவும், மிகுதி ஐம்பது வீதம் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையிலும் நடத்துவது என்று அச்சட்ட மூலம் உரைத்தது.

அந்தச் சட்டமூலத்தின்படி இனி மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாயின், மாகாணங்கள் தோறும் அதற்கான தொகுதிகள் மீள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டப் பட்டது. அதுவரைத் தேர்தல் நடத்தப்பட முடியாது எனபதால் காலாவதியான சபைகளுக்கான தேர்தல்களை தேர்தல் ஆணையத்தால் அறிவிக்க முடியாமல் போயிற்று.

இப்படிக் காலவரையறையின்றி மாகாண சபைத் தேர்தல்கள் தள்ளிப்போவதற்கு நாடாளுமன்றிலும் வெளியிலும் கடும் எதிர்ப்புக் கிளம்பியதும் அதைச் சமாளிக்க நல்லாட்சி அரசு அந்தச் சட்டமூலத்திலேயே ஒரு விடயத்தைப் புகுத்தியது.

மாகாண சபைகளின் எல்லைகளை வகுத்து, தேர்தல்களை நடத்துவதற்கான நடவடிக்கைகள் அடுத்த ஓராண்டுக்குள் பூர்த்தியாக வேண்டும் என்பதை வலியுறுத்தும் சட்ட ஏற்பாடுகளை அந்தச் சட்டமூலத்துக்குள் அது புகுத்தியது. அந்த ஏற்பாடுகளே மாகாண சபைத் தேர்தல்களை இப்போதைக்கு நடத்த முடியாத பெரும் சட்டச்சிக்கலை கொண்டு வந்திருக்கின்றன.

இந்த விடயங்களை எல்லாம் உள்ளடக்கிய அந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் கடந்த செப்ரெம்பரில் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டது.

'2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டம்' என்ற பெயர் கொண்ட அந்தச் சட்டத்தின் படி –

★ *மாகாணசபைகளின் தொகுதிகளை மீள நிர்ணயம் செய்வதற்கான செயலணி ஒன்றை ஜனாதிபதி நியமிக்க வேண்டும். அது நான்கு மாத காலத்துக்குள் தனது பணியைப் பூர்த்தி செய்து மாகாண எல்லை நிர்ணய அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.*

★ *அது சமர்ப்பிக்கப்பட்டதும், அடுத்த இரண்டு வார காலத்துக்குள் சம்பந்தப்பட்ட அமைச்சர் அதனை நாடாளுமன்றத்தில் சமர்பித்து, அதற்கு மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அது தவறுமானால், இந்த விடயத்தை மீளாய்வு செய்வதற்காகப் பிரதமர் தலைமையில் ஒரு மீளாய்வு குழுவை அடுத்த இரண்டு மாதங்களுக்குள் சபாநாயகர் நியமிக்கவேண்டும்.*

★ *அந்த எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அடுத்த ஒரு மாத காலத்துக்குள் அது நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கால் அங்கீகரிக்கப்படாவிட்டால், அந்த விடயம் தொடர்ந்து கையாளப்படுவதற்காக மீளாய்வுக் குழுவுக்குப் பரிந்துரைக்கப்பட வேண்டும்.*

– இதுதான் அந்தச் சட்டத்தில் கூறப்பட்ட விடயம். இங்குதான் சிக்கல் எழுந்துள்ளது.

*குறிப்பிட்டபடி நான்கு மாத காலத்துக்குள் கடந்த பெப்ரவரி 19 ஆம் திகதி எல்லை நிர்ணயக் குழு தனது அறிக்கையை உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரிடம் கையளித்தது.*

★ *அவரும் சட்ட ஏற்பாடுகளின் படி 2 வார காலத்துக்குள் – மார்ச் 6 இல் – நாடாளுமன்றத்துக்கு அதைச் சமர்ப்பித்து விட்டார். ஆனால் அது நாடாளுமன்றத்தில் அன்றோ அல்லது அடுத்த ஒரு மாத காலத்துக்குள்ளோ மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களால் அங்கீகரிக்கப் படவில்லை.*

★ *எனவே அது இனி மீளாய்வுக் குழுவினால்தான் கையாளப்பட முடியும்.*

★ *ஆனால் மீளாய்வுக் குழு இன்னும் சபாநாயகரால் நியமிக்கப்படவில்லை. அந்த எல்லை மீள் நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது மார்ச் 6 ஆம் திகதி, அடுத்த இரண்டு மாத காலத்துக்குள் மீளாய்வுக் குழுவை சபாநாயகர் நியமிக்க வேண்டும் என்பதால் அந்தக் கால அவகாசம் மே 6 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.*

★ *ஆனால், ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய நாடாளுமன்றம் மே 8 ஆம் திகதி வரை முடக்கப்பட்டு விட்டது. இந்தக் காலம் வரை – அதாவது நாடாளுமன்றம் மீள செயற்படத் தொடங்கும் வரை – சபாநாயகர் மீளாய்வுக் குழுவை நியமிக்க முடியாது. மே 8 ஆம் திகதி நாடாளுமன்றம் மீளச் செயற்படத் தொடங்கும் போது மீளாய்வுக் குழுவை சபாநாயகர் நியமிப்பதற்கான சட்டத்தின் கால அவகாசம் முடிவடைந்திருக்கும். அதனால் மே 6 ஆம் திகதிக்குப் பிறகு அதை அவரால் நியமிக்க முடியாது. அதற்கான சட்ட வலு அவருக்கு இல்லாமல் போயிருக்கும்.*

அப்படியானால் அதன் பின்னர் என்ன செய்வது?

இதுதான் மாகாணசபைகள் தேர்தலுக்கான இனறைய பரிதாப நிலைமை. முட்டுச் சந்தில் வந்து – முடங்கிப் போய் நிற்கின்றது சட்ட ஏற்பாடு.

மாகாணசபைகள் புதிய தேர்தல் சட்டத்தை இந்த வருடம் செப்ரெம்பருக்குள் நிறைவேற்றி நடைமுறைக்குக் கொண்டு வரச் சொல்வதை உறுதிபடுத்துவதற்காக கொண்டு வரப்பட்ட சட்ட ஏற்பாடுகளே இப்போது சட்டப் பூட்டாக வந்து பூட்டிக் கொண்டு விட்டன. அதைத் திறப்பதற்கான சாவி எது? வழி வகை எது? தெரியவில்லை.

மீண்டும் இந்தத் தேர்தல் சட்டத்தை ஆரம்பத்திலிருந்து தொடங்குவதா என்பதும் புரியவில்லை.

சட்ட வட்டாரங்கள் இந்த முடக்க நிலையைத் தாண்டுவது எப்படி என்று தலையைப் போட்டு உருட்டிக் கொண்டிருக்கின்றன எனக் கேள்வி.

அவர்கள் ஏதும் தீர்வுடன் வரக்கூடும். ஆனால், இப்போதைய தேர்தல் முறைமை குறித்து கசப்பான பாடங்களை உள்ளூராட்சித் தேர்தலில் படித்துள்ள நமது கட்சிகள், அதே பாணியில் – இன்னும் வலிமையான இறுக்கங்களைக் கொண்ட – இந்த மாகாணசபைத் தேர்தல் சட்டங்களையும் ஒப்பேற அனுமதிக்குமா என்பதும் கூட கேள்விக் குறிதான்.

மொத்தத்தில் மாகாணசபைத் தேர்தல்கள் இப்போதைக்கு மட்டும் அல்ல – எப் போதைக்கும் நடப்பது சந்தேகமே.

-மின்னல்-

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சேர்ந்து அரசு நடத்தும் கட்டாயம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தற்போதைய பதவிக்காலத்தில் இன்னும் எஞ்சியிருப்பது ஒன்றரை வருடங்கள்தான். அடுத்த ஆண்டு இறுதியில் மீண்டும் ஜனாதிபதித் தேர்தல். அதுவரையில் அவரது அதிகாரத்தை அசைப்பதற்கு வாய்ப்புக்கள் குறைவு.

அதேசமயம், தற்போது நடைமுறையில் உள்ள நாடாளுமன்றத்தை, பதவியில் உள்ள ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவினால் கலைக்கவும் முடியாது. அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் படி –

ஒரு பொதுத் தேர்தலின் பின்னர் நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு நடைபெற்று நான்கரை ஆண்டுகள் கழியும் வரை, அந்த நாடாளுமன்றம் தானாகவே ஒரு தீர்மானத்தை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் மேற்கொண்டாலன்றி. அதனைக் கலைக்க முடியாது.

2015 ஒகஸ்ட் பொதுத் தேர்தலில் தெரிவான இந்த நாடாளுமன்றம் அடுத்த மாதம் செப்டெம்பரில் முதல் தடவையாகக் கூடியது. அதன்படி 2020 மார்ச் வரை இந்த நாடாளுமன்றத்தை ஜனாதிபதியால் கலைக்க முடியாது.

அதாவது, அடுத்த ஆண்டு இறுதியுடன் தற்போதைய ஜனாதிபதிப் பதவிக் காலத்தை முடிவுறுத்தும் மைத்திரிபால சிறிசேனவினால் தமது தற்போதைய பதவிக் காலத்தில் இந்த நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது. வேண்டுமென்றால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வென்று மீண்டும் ஜனாதிபதியாகி அதனை அவர் செய்ய முடியும். ஆனால், அதனைச் செய்வதற்கும் 2020 மார்ச் வரை அவர் காத்திருக்க வேண்டும்.

ஆட்சியிலிருக்கும் பிரதமரை நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு மூலம் தோற்கடித்தாலன்றி அவரை வீட்டுக்கு அனுப்பும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு இல்லை என்கிறது அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்துக்கான வியாக்கியானம்.

அப்படியானால் –

வேறு ஏதேனும் அதிசயங்கள், அசம்பாவிதங்கள், அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்தாலன்றி –

இதே ஜனாதிபதி அடுத்த ஆண்டு இறுதிவரைத் தொடருவார். இதே நாடாளுமன்றமும், பிரதமரும் கூட அதிகாரத்தில் தொடரும் நிலையும் தவிர்க்க முடியாதது.

இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அடுத்த ஆண்டு இறுதிவரை சேர்ந்து அரசை கொண்டு நடத்துகின்றமையைத் தவிர அவர்களுக்கு வேறு மார்க்கம் ஏதுமில்லை என்பது தெளிவு.

இருவரும் அதனைப் புரிந்துகொண்டு அரசியல் செய்கின்றார்கள் என்பதும் கூட வெளிப்படையானதுதான். தத்தமது அரசியல் ஸ்திரப்பாட்டிற்காக ஒருவரை, ஒருவர் அரசியல் கால்தடம் போட்டு விழுத்த விரும்பினாலும் கூட – அந்த முயற்சியில் அவர்கள் ஈடுபடவில்லை எனக் கூறமுடியாத சூழலிலும் கூட – ஒருவரை ஒருவர் சகித்துக்கொண்டு, சேர்ந்து நடக்கும் அரசியல் கட்டாயம் அவர்கள் மீது சுமத்தப்பட்டே இருக்கின்றது.

இதனால்தான், அடுத்த ஒன்றரை ஆண்டுகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கட்சியும் அரசைக் கொண்டு நடத்துவதற்கான வழிமுறைகள், மார்க்கங்கள், இணக்கங்கள் அடங்கிய புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மீளச் செய்யத் தயாராகி வருகின்றன.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்ட பின்புலத்தில் குழம்பிப் போயிருக்கும் அரச கூட்டமைப்பைத் தூக்கி நிறுத்துவதற்கான அமைச்சரவை மறுசீரமைப்பு பெரும்பாலும் நாளை – மேதினத்தன்று – காலை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கு முன்னர் அல்லது பின்னராக – எந்நேரத்திலும் – இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டு பிரதான தேசியக் கட்சிகளினதும் தலைவர்களான ஜனாதிபதியும், பிரதமரும் வேறு மார்க்கங்கள் இல்லாதமையால் சேர்ந்து ஆட்சியையும் அரசையும் கொண்டிழுப்பதற்கான ‘சகவாழ்வு இணக்க’ புரிந்துணர்வு உடன்பாட்டில் கையெழுத்திட்டாலும் கூட, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தங்களின் வெற்றியை இலக்குவைத்துக் காய்நகர்த்துவதிலும் பின்னிற்கப் போவதில்லை என்பதும் ஊகிக்கத்தக்கதே.

‘ஆரியக்கூத்து ஆடினாலும் காரியத்தில் கண்’ என்ற மாதிரி, சேர்ந்து அரசை நடத்தினாலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஒருவரை விழுத்தி மற்றவர் நிறைவேற்று அதிகாரத்தை எட்டுவது என்பதில் அவர்கள் உறுதியாகத்தான் முயல்வார்கள்.

மீண்டும் ஒரு தடவை பொது எதிரணி வேட்பாளராகத் தன்னை இறக்கினால் மட்டுமே மீளவும் மஹிந்த ராஜபக்ஷ தரப்பு அதிகாரத்துக்கு வருவதைத் தடுக்க முடியும் என்ற கட்டாயத்தை ரணிலுக்கும் அவரது ஐ.தே.கட்சிக்கும் ஏற்படுத்தி, அதன் மூலம் ஜனாதிபதி அதிகாரத்தைத் தக்க வைக்க முடியுமா என்று நப்பா சைப்படுகிறார் மைத்திரிபால சிறிசேன.

மைத்திரி தலைமையிலான சு.க, மஹிந்த தலைமையிலான பொதுஜனப்பெரமுனை எனத் தனது எதிர்த்தரப்புக்களை இரண்டாக்கிப் பலவீனப்படுத்துவதன் மூலம் ஜனாதிபதிப் பதவியைத் தான் அடையலாமா என்று கணக்குப்போடுகின்றார் ஐ.தே.க. தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

தேசிய நல்லாட்சி அரசில் ‘சக வாழ்வு இணக்கத்துக்கு’ உடன்பாடு சேர்த்து அரசியல் நடத்தும் ஜனாதிபதியும், பிரதமரும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்துத் தங்களுக்குள் மாறி மாறிக் கால்தடம் போட, இடையில் வந்த தாமரை மொட்டு வெற்றியைத் தட்டிச் சென்று விடுமோ, யாருக்குத் தெரியும்?

# நிறைவேற்று அதிகாரம் ஒழிவதை நாட்டு மக்களும் விரும்புகின்றனர்

## கூறுகின்றது ஜே.வி.பி.



நாட்டில் நடைபெற்ற அனைத்து ஜனாதிபதித் தேர்தல்களிலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டும் என்ற விருப்பத்தையே நாட்டு மக்களின் பெரும்பாலானவர்கள் வெளியிட்டுள்ளனர் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நடைபெற்ற பேச்சு ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்டு, வெற்றி பெற்ற மற்றும் தோல்வியடைந்த அனைத்து வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படும் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை முறையை ஒழிக்கவேண்டும் என்பது மக்கள் விடுதலை முன்னணியின் யோசனை மாத்திரமல்ல, கடந்த 1994 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற 5 ஜனாதிபதித் தேர்தல்களில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்குமாறே நாட்டு மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாக வாக்குறுதி வழங்கியே, சந்திரிகா, மஹிந்த, மைத்திரிபால ஆகியோர் ஜனாதிபதிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் அவர்களுடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்களும் இதே கொள்கையை முன்வைத்தே தேர்தலில் போட்டியிட்டனர்.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மைத்திரியும் மஹிந்தவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை ஒழிப்பார்கள் எனக் கூறினர். அதேபோல் 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற மஹிந்தவும் அந்தப் பதவியை ஒழிப்பதாகக் கூறியமையுடன் தோல்வியடைந்த சரத் பொன்சேகாவும் அதனையே குறிப்பிட்டிருந்தார்.

இதனால், இது மக்கள் விடுதலை முன்னணியின் யோசனையல்ல, நாட்டு மக்களின் 95 வீதமானோரின் கொள்கை. எனினும் ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை மீறிச் செயற்பட்டனர் – என்றார். (ஐ)

# முதலாம் திகதியே மே தினம்

## வவுனியா மருத்துவர்கள் அறிவிப்பு

கொழும்பு, ஏப்.30

முதலாம் திகதியே மேதினமாக அனுஷ்டிக்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வவுனியா கிளை மே முதலாம் திகதி உலகத் தொழிலாளர் தினத்தை அனுஷ்டிக்கின்றமைக்கு அமைவாக அந்தத் தினத்தில் நிகழ்வுகளை நடத்தவுள்ள ஏனைய தொழிற்சங்கங்களுடன் இணைந்துகொள்ளவுள்ளது.

அத்துடன் மே தினத்தை மாற்றும் செயற்பாட்டை ஒருபோதும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வவுனியா கிளை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை – என்றுள்ளது. (ஐ)

# ஆணாக நடித்து யுவதியை திருமணம் செய்த பெண்

## மூதூரில் புதுவித ஏமாற்று நடவடிக்கை

திருமலை ஏப். 30

திருகோணமலையில் ஆணாக நடித்து, மற்றொரு பெண்ணை ஏமாற்றிய பெண்ணும், அவருக்கு உதவியவர்கள் என்று கருதப்படும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆணாக நடித்த பெண், மூதூர் நாராயணபுரம் பகுயில் உள்ள இளம் பெண்ணொருவரை கடந்த 25 ஆம் திகதி திருமணம் செய்துள்ளார்.

திருமணம் நடைபெற்று இரண்டு நாள்களின் பின்னர் தனது கணவர் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக மணப்பெண் உறவினர்களிடம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து, உறவினர்கள் அவரிடம் சோதனை செய்த போது, அவர் பெண் என்பதும் ஆணாக சித்திரித்து மோசடியில் ஈடுபட்டமையும் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மூதூர் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். தனது சகோதரனின் சாயலை ஒத்துள்ள அந்தப் பெண், சகோதரரின் போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தைத் தமது அடை யாள ஆதாரமாக வைத்துக் கொண்டு இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

இந்த மோசடிக்கு உதவினர் என்று சந்தேகிக்கப்படும் மற்றுமொரு பெண்ணையும் லொறிச் சாரதி ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பெண்களைக் கடத்தும் நோக்கில் இந்த மோசடி நடந்திருக்கக் கூடும் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# கட்டுமர சவாரி, படகுப் போட்டி கசூரினா கடற்கரையை ஒட்டி





மே தினத்தை முன்னிட்டு காரைநகர் கசூரினா கடற்கரைக்கு அருகாமையில் உள்ள சாம்பலோடை கடற் பிரதேசத்தில் நேற்று கட்டு மரச்சவாரி போட்டி மற்றும் படகுச்சவாரி போட்டி இடம்பெற்றது.

கங்கைமதி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இந் நிகழ்வில் காரைநகர் பிரதேச சபை உப தவிசாளர் க.பாலச்சந்திரன், பிரதேச சபை உறுப்பினர் விஜயராசா, சன சமூக நிலைய உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## நாளை

01.04.2018
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம் : விசாகம் பி.ப 4.17 வரை
திதி : பிரதமை மு.ப. 7.08 வரை
சுபநேரம் : 10.27 – 11.57 வரை
இராகுகாலம் : 2.57 – 4.27 வரை

# சிறந்த சமூகத்துக்கான செய்தியை உலகிற்குச் செல்ல வெசாக் தினக் கொண்டாட்டத்துடன் அணி சேருங்கள்

## ஜனாதிபதி மைத்திரி அழைப்பு



சிறந்த ஒழுக்கப் பண்பாடான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கும் வளமான பௌத்த சமூகம் குறித்த செய்தியைத் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக கொண்டு செல்வதற்கும் இந்த உன்னத வெசாக் தினக் கொண்டாட்டத்துடன் அணி சேருங்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனைத்து மக்களிடமும் கேட்டுக்கொண்டுள்ளார்.

சத்தர்ம கீர்த்தி ஸ்ரீ சந்திர ஜோதி, மாத்தளை மகா திசாவை பிரதி தலைமை சங்க நாயக்க தேரர் பதவிக்கு சங்கைக்குரிய அம்பகஸ்வெவே ராகுலாபிதான மகாநாயக்க தேரர் நியமிக்கப்பட்டமைக்கான சன்னாஸ் பத்திரம் வழங்குவதற்காக தம்புள்ள ஸ்ரீ வலகம்பா மகா பிரிவென விகாரையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பௌத்த சமூகத்தைப் பலப்படுத்துவதன் மூலமே சிறந்த ஒழுக்கப் பண்பாடான சமூகம் குறித்த எதிர்பார்ப்பை வைக்க முடியும்.

பௌத்த விகாரை அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புக்காகவும் தொல்பொருள்களை பாதுகாப்பதற்கும் அரசாங்கம் முன்னுரிமையளித்து நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம்.

உலக தொழிலாளர் தினத்தன்று காலையில் நியமிக்கப்படவுள்ள புதிய அமைச்சரவையின் ஊடாக மகா சங்கத்தினர் முன்வைத்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் கிடைக்கும். பௌத்த சாசனத்தின் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமென்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சங்க நாயக்க தேரருக்கான சன்னஸ் பத்திரத்தை ஜனாதிபதி வழங்கினார். வலகம்பா பிரிவெனா விகாரையைஅண்மித்த குளத்தின் புனரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமையைக் குறிக்கும் நினைவுப்படிகத்தையும் ஜனாதிபதி இதன்போது திரைநீக்கம் செய்தார்.

பிரிவெனா வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலாசார கிராமத்தையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

அஸ்கிரி பீடத்தின் அனுநாயக்க தேரர்களான சங்கைக்குரிய ஆனமடுவே தம்மதஸ்சி அனுநாயக்க தேரர், சங்கைக்குரிய வெண்டருவே உபாலி அனுநாயக்க தேரர், ரங்கிரி தம்புலு ரஜ மகா விகாராதிபதி கலாநிதி கொடகம மங்கள தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினரும் லக்ஷ்மன் வசந்த பெரேரா, எஸ்.பி.திசாநாயக்க, சரத் ஏக்கநாயக்க, பந்துல யாலேகம, ஜனகபண்டார தென்னகோன் மற்றும் தம்புள்ள நகராதிபதி ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# பால்மாக்களின் விலைகள் அதிகரிக்கப்படுமா?



கொழும்பு, ஏப். 30

இலங்கையில் சமையல் எரிவாயுக்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் இறக்குமதி முழு ஆடை பால் மாக்களின் விலைகளும் அதிகரிக்கப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கையின் அமைச்சரவை உபகுழு ஆராய்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், எப்போது பால்மாக்களின் விலைகள் அதிகரிக்கப்படும் என்ற தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ஹசித்த திலகரட்ண தெரிவித்துள்ளார்.

இதேவேளை இறக்குமதி பால் மாக்களின் விலைகள் ஏற்க னவே 6 மாதங்களுக்கு முன்னரும் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மரக்கறி விவசாயிகளுக்கான நிவாரணம்: ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடல்



கொழும்பு, ஏப். 30

மரக்கறி விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து விசேட கலந்துரையாடல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

உலர் வலய மரக்கறி வகைகளின் விலைகள் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ள காரணத்தினால் உற்பத்தியாளர்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வைக் கண்டறிவதற்கான விசேட கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரையின் பேரில் அமைச்சர் சரத் அமுனுகம மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ ஆகியோரின் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

பூசணி, வெள்ளரி, தக்காளி உள்ளிட்ட மரக்கறி வகைகளின் விலை பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ள காரணத்தால் உலர் வலய விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக கவனம் செலுத்தி அரசாங்கத்தின் தலையீட்டுடன் இந்த மரக்கறி வகைகளை சந்தைகளுக்கு அனுப்பி வைக்கும் முறை குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்த மரக்கறி வகைகளை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் ஊடாக கொள்வனவு செய்யும் முறை குறித்தும் தனியார் துறையின் பங்களிப்பை இவற்றுக்கு பெற்றுக்கொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், இந்த மரக்கறி வகைகளை பாதுகாத்து வைப்பதற்கான புதிய முறைமைகளை பரீட்சித்துப் பார்ப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் விவசாயத்துறை அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள், நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் தலைவர், சிவில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகளும் பங்குபற்றினர்.

# பல பகுதிகளிலும் பிற்பகலில் மழை!

கொழும்பு, ஏப். 30

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மழையுடன் கூடியகாலநிலைகாணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, குறிப்பாக மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களிலும், ஏனைய பகுதிகளிலும் பிற்பகல் 2.00 மணிக்கு பின்னர் இடியுடன் கூடிய மழை பெய்யும் எனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# வீதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளமையினால் பதுளை அருகே போக்குவரத்து பாதிப்பு



கொழும்பு, ஏப். 30

மண்சரிவு காரணமாக பதுளை அருகே போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரகலை, ஹல்தும்முல்லை, மன்தென்ன, மாரகய மற்றும் கினிகத்கல ஆகிய பிரதேசங்களுக்கான நெடுஞ்சாலைகளே மண்சரிவால் மூடப்பட்டு போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

தற்போது பாதையில் தேங்கியுள்ள மண்ணை இயந்திரங்கள் கொண்டு அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மண்சரிவின் காரணமாக கினிகத்கல மற்றும் கிரிமெட்டிய ஆகிய கிராமங்கள் போக்குவரத்து வசதிகள் இன்றி முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

# ‘ஸ்திரமற்ற அரசும் பொருளாதாரமும்’

## மஹிந்த சாடுகிறார்



கொழும்பு, ஏப். 30

எந்தவொரு நாட்டிலும் ஸ்திரமற்ற அரசு காணப்படுமாயின், அங்கு பொருளாதாரமும், நாடும் ஸ்திரமற்ற நிலையிலேயே காணப்படும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எமது நாட்டுக்கும் இதுபோன்றதொரு நிலையே ஏற்பட்டுள்ளது எனவும் களுத்துறையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மார்ச், ஏப்ரலில் மட்டும் ரூ. 1000 கோடிக்கு அச்சிடப்பட்டன புதிய நாணயத்தாள்கள்!

கொழும்பு, ஏப்.30

அரசால் கடந்த 2018 மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய இரு மாத காலப்பகுதியில் மாத்திரம் ஆயிரம் கோடி ரூபா நாணயத் தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசின் தினசரி செலவீனம், அரச ஊழியர்களின் சம்பளம் உட்பட பல வேறுபட்ட கொடுப்பனவுகள் என்பவற்றுக்காக இவ்வாறு பணம் அச்சிடப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

அமெரிக்க டொலர் 160 ரூபாவை விடவும் அதிகரிக்கப் பிரதான காரணம் அரசாங்கத்தின் இந்தப் பணம் அச்சிடும் நடவடிக்கை எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

எதிர்வரும் நாளகளில் டொலரின் பெறுமானம் இன்னும் அதிகரிக்கும் அபாயம் இருக்கின்றது எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அடுத்து வரும் நாள்களில் சர்வதேச நாணய நிதியம் அரசுக்கு வழங்கவுள்ள அடுத்த கட்ட கடன் உதவி



மற்றும் அம்பாந்தோட்ட துறைமுக குத்தகையின் மீதிப் பணம் என்பவற்றை வழங்கவுள்ளது.

இதனால், குறுகிய காலப்பகுதிக்கு இந்தப் பண வீக்கம் கட்டுப்படுத்தப் படலாம் எனவும் பொருளியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பணம் அச்சிடுவது தொடர்பில் இதுவரை நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் கடந்த சிலதினங்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி, இந்த விவகாரங்களை நாடாளுமன்றத்தில் தெரிவிக்க வேண்டியதில்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது.

## தினசரி ராசி பலன் (30.04.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பிவருடம் சித்திரைத்திங்கள் 17 ஆம் நாள் திங்கட்கிழமை பூரணைத்திதி. காலை 6.28 மணி வரை பின்னர் பிரதமை. நட்சத்திரம்: சுவாதி பகல் 2.46 மணி வரை. பின்னர் விசாகம். அமிர்தயோகம் பகல் 2.46 மணி வரை பின்னர் அசுபயோகம

**ராகுகாலம் -** காலை 07.28 மணி முதல் 9.01 மணி வரை.

**சுபநேரம் -** பகல் 11.54 மணி முதல் 01.24 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி -** சித்திரை மாத தேய்பிறை பிரதமை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு -** சுவாதி

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** விருத்தியான நாள். நினைத்த காரியங்கள் நடக்கும். செல்வமும் செல்வாக்கும் பெருகும். வேலை பார்க்கும் இடங்களில் இருக்கும் சிறுசிறு தடைகள் கூடத் தகர்த்தெறியப்படும்.

**ரிஷபம்** இன்பமான நாள். பணப் புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். பெண்களுக்கு புதிய முயற்சிகள் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**மிதுனம்** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். விவசாயிகளுக்கு இதுவரை இருந்த சிரமங்கள் குறையும். எடுத்த செயல்களை வெற்றி கரமாக முடிப்பார்கள். புது முயற்சிகள் கைகூடும். புகழும் தேடி வரும்.

**கடகம்** கவலையான நாள். தேவையற்ற பணச் செலவுகள் உண்டாகும். எடுத்த காரியங்கள் கை கூடுவதற்கு கடின முயற்சி தேவை. குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும். உறவினர்களால் தொல்லை ஏற்படும்.

**சிம்மம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். அளவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். வியாபாரிகள் புதிய முயற்சிகளில் முதலீடுகள் செய்ய வேண்டாம். அலுவலகத்தில் வேலை அதிகமாகும்

**கன்னி** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். இவர்கள் வாக்குக்கு சமூகத்தில் மதிப்பு இருக்கும். பெண்களுக்கு திடீர் நன்மைகள் அமையும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்புக் கிட்டும்.

**துலாம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவில் அன்பும் பாசமும் நிறைந்திருக்கும். சகோதர வழியில் அனுகூலம் உண்டாகும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** சலனம் மிகுந்த நாள். மனக் குழப்பம் அதிகரிக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். பயணங்களில் கவனம் தேவை. தாய், தந்தையின் உடல் நிலை பாதிப்படையும்.


**தனுசு** மேன்மையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப உறவு மேம்படும். அரசாங்க உத்தியோகத்தில் எதிர்பார்த்த பணி உயர்வு கிடைக்கும். சிலருக்கு கல்யாணப் பேச்சு வார்த்தைகள் கூடி வரும்.

**மகரம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். குடும்பத்தில் சிறு கருத்து வேற்றுமை தோன்றி நிவர்த்தியாகும். காணி, வீடு வாங்குவது, விற்பது எவற்றிலும் எச்சரிக்கை தேவை.

**கும்பம்** உயர்வான நாள். வருமானம் உயரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். எண்ணங்கள் யாவும் மனம் போல் நிறைவேறும். விரோதிகள் விலகுவார்கள். வெளிநாட்டுப் பண முயற்சிகள் வெற்றியைத் தரும்.

**மீனம்** யோசனையான நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். பண விஷயங்களில் ஏமாற்றமடைய நேரும். உத்தியோகத்தர்களுக்கு வேலையில் கடுமையான முயற்சிகள் தேவைப்படும்.

**சந்திராஷ்டம நாள்: பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**





கவிஞர் த.நாகேஸ்வரனின் மணி விழா வைபவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் 20 வறிய மாணவர்களுக்கு விழாக் குழு ஏற்பாட்டில் கல்வி ஊக்குவிப்புத் தொகைகள் வழங்கப்பட்டன. ஊக்குவிப்புத் தொகைகளை, சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை மற்றும் முன்னாள் அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோர் வழங்கினர். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வடமாகாணசபை உறுப்பினர் சயந்தன், சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன் தலைமையில் மாண வர்களின் எதிர்கால வெற்றிக்குத் தாய் மொழிக் கல்வி அவசியமா?/அவசியமற்றதா? என்ற தொனிப்பொருளில் சிறப்புப்பட்டி மண்டபம். (இ-21)

## வெசாக்கை முன்னிட்டு சிறைக் கைதிகள் 432 பேர் விடுதலை!

கொழும்பு, ஏப். 30

வெசாக் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதுமுள்ள சிறைச் சாலைகளில் காணப்படும் சிறிய தவறுகளுடன் தொடர்புடைய 432 சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.


ஜனாதிபதியின் விசேட உத்தரவுக்கு அமைய கைதிகள் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனச் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.



வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

தேர்த்திருவிழாவின் போது அடியார்கள் அங்கபிரதட்சணம், அடியழித்தல் மற்றும் கற்பூரச்சட்டி ஏந்தி தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்தனர்.

நூற்றுக்கணக்கான பக்தர்கள் தேர்த்திருவிழாவில் கலந்துகொண்டனர். பின்னர் காலை பதினொன்றரை மணியளவில் பச்சை சாத்தும் உற்சவம் இடம்பெற்றது. (இ)







புத்த பெருமானின் போதனைகள் மூலம்

# நாட்டில் அமைதி நிலவ வேண்டும்

கொழும்பு, ஏப்.30

மக்கள் மத்தியில் அமைதியும் சமாதானமும் நிலவவேண்டும் என்று அகிம்சையைப் போதித்த கௌதம புத்தரின் வழியில் எமது நாடு சுபீட்சம் காண வேண்டும் என மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சருமான பி. திகாம்பரம் விடுத்துள்ள வெசாக் தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

ஆசையே துன்பங்கள் அனைத்துக்கும் காரணம் என்று புத்த பகவான் போதித்தார். மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு அரிய பல தத்துவங்களை முன்வைத்து நல்வழிப்படுத்திய



அந்த புண்ணியசீலன் வகுத்த பஞ்சசீலக் கொள்கையை பின்பற்றுவதன் ஊடாக நாட்டில் சுபீட்சத்தை ஏற்படுத்த வேண்டும். அதை விடுத்து ஒருவர் மீது ஒருவர் பொறாமை கொண்டு அழிக்க நினைப்பதும் அமைதியைக் குலைப்பதும் பௌத்த தர்மத்துக்கே இழுக்கான செயலாகும்.

நாடு நலம் பெறவேண்டுமானால் எமது மத்தியில் காணப்படும் குரோதங்கள் நீங்க வேண்டும். தாம் மட்டுமே சகல சௌகரியங்களையும் சௌபாக்கியங்களையும் அனுபவிக்கவேண்டும் என்ற சுயநலம் மறையவேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்க எம்மால் இயன்றதைச் செய்யவேண்டும்.

நாட்டில் வன்முறை கலாசாரத்தை ஒழித்து இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை வளர்த்தெடுக்க வேண்டும். அதுவே உண்மையான பௌத்த மதக் கோட்பாடாகும். இலங்கை மக்கள் அனைவரும் ஒற்றுமையாக ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக சீரும் சிறப்பும் பெற்று வாழ வெசாக தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புத்தளம் மாவட்டத்தில் கடுமையான வறட்சி



## 66,500 குடும்பம் பாதிப்பு

கொழும்பு, ஏப்.30

தற்போது நாட்டில் ஏற்பட்டு வரும் கடும் வறட்சி காரணமாக புத்தளம் மாவட்டத்தில் 66 ஆயிரத்து 500 குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 16 ஆயிரத்து 670 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், கடல் சீற்றத்தால் 25 குடும்பங்களைச் சேர்ந்த 78 பேர் அவதிக்குட்பட்டுள்ளனர் என்று புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிக்கின்றது.

புத்தளம் மாவட்டம் கூடுதலான வறட்சிக்குட்பட்ட பிரதேசமாக இனம் காணப்பட்டுள்ளது.

சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் 7 ஆயிரத்து 769 குடும்பங்களைச் சேர்ந்த 29 ஆயிரத்து 252 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனமடு பிரதேச செயலகப் பிரிவில் 10 ஆயிரத்து 174 குடும்பங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்து 715 பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவம் தெரிவிக்கின்றது.

மேலும், கருவெலகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவில் 7 ஆயிரத்து 162 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 497 பேரும், பள்ளம பிரதேச செயலகப் பிரிவில் 7 ஆயிரத்து 13 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 446 பேரும், நவகத்தேகம பிரதேச செயலகப் பிரிவில் 6 ஆயிரத்து 170 குடும்பங்களைச் சேர்ந்த 22 யிரத்து 694 பேரும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மகாவெவ பிரதேச செயலகப் பிரிவில் 2 ஆயிரத்து 961 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 694 பேரும், வண்ணாத்துவில்லு பிரதேச செயலகப் பிரிவில் 3 ஆயிரத்து 181 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 796 பேரும், மாதம்பை பிரதேச செயலகப் பிரிவில் 3 ஆயிரத்து 379 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 113 பேரும், முந்தல் பிரதேச செயலகப் பிரிவில் 4 ஆயிரத்து 194 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 206 பேரும், புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில் 345 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 257 பேரும், ஆரச்சிக்கட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் 6 ஆயிரத்து 591 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 628 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவம் தெரிவிக்கின்றது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 6 ஆயிரத்து 750 இலங்கையர்கள் குவைத்திலிருந்து வெளியேற்றம்!

கொழும்பு, ஏப். 30

குவைத் அரசு வழங்கிய பொது மன்னிப்புக் காலப் பகுதியில் சட்டவிரோதமாக அந்த நாட்டில் தங்கியிருந்த 6 ஆயிரத்து 750 இலங்கையர்கள் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

இப்பொது மன்னிப்புக் காலப் பகுதியில் மற்றும் சிலர் வீசா வழங்கப்பட்டு அந்த நாட்டிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமாக குவைத்தில் தங்கியுள்ளவர்களை வெளியேறுவதற்கு குவைத் அரசு கடந்த ஜனவரி 29 முதல் பெப்ருவரி 22 வரையான காலப்பகுதியை பொது மன்னிப்புக் காலமாக அறிவித்திருந்தது.

பின்னர் இந்தக் காலப் பகுதி இலங்கை தூதரகத்தின் வேண்டுகோளின் பேரில் ஏப்மீல் 22 வரை நீடிக்கப்பட்டிருந்தது என்றும் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

# மேன்முறையீட்டு நீதியரசர் நியமனம்: மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு அநீதி!

கொழும்பு, ஏப். 30

அரசமைப்புச் சபையினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்ட நீதியரசர் நியமனம் மேல் மன்ற நீதிபதிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட அநீதியாகும் என மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தின் மத்திய சபை அறிவித்துள்ளது.

அந்தச் சபையின் தலைவர் விக்கும் களுவாராச்சி இதனைக் கூறியுள்ளார்.

மேல் நீதிமன்ற நீதிபதிகளிலிருந்தே மேன்முறையீட்டு நீதியரசர் நியமிக்கப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கம்பஹா பகுதி களஞ்சியசாலையில்

# காலாவதியான நிலையில் ஒன்பது தொன் உரம் மீட்பு!

கொழும்பு, ஏப். 30

காலாவதியான திகதி மற்றும் உற்பத்தி செய்த நாட்டின் பெயர் மாற்றப்பட்ட நிலையில் விற்பனை செய்வதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 9 தொன் உர மூடைகளை நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் கம்பஹா, ஹுனுமில்ல பகுதியிலுள்ள களஞ்சியசாலை ஒன்றிலிருந்து கைப்பற்றியுள்ளனர்.

சீனாவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள இந்த உரத்தை நெதர்லாந்தில் உற்பத்தி செய்துள்ளதாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு உற்பத்தி செய்த உரம் 2019 ஆம் ஆண்டுடன் காலாவதியாகிறது. இதனை 2020 ஆம் ஆண்டு காலாவதியாகும் என அச்சிடப்பட்டு உர மூடைகள் தயார்படுத்தப்பட்டுள்ளன.



அத்துடன், இந்த நிறுவனத்துக்கு எதிராக மினுவாங் கொடை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் அதிகாரசபை அறிவித்துள்ளது.

புனித ரஸ்மி விசாக நோன்மதி வலயத்தில்

# புனிதப் பொருள்களைத் தரிசிக்க நேற்றுக் காலை முதல் சந்தர்ப்பம்

கொழும்பு, ஏப்.30

புத்த ரஸ்மி விசாக நோன்மதி வலயத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள இந்தியாவின் சாரணாத்தில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ள புனிதப் பொருள்கள், பாகிஸ்தானில் இருந்து கொண்டுவரப்பட்ட புனித பொருள்கள் முதலானவற்றை நேற்றுக் காலை 7 மணி முதல் பொது மக்களால் தரிசிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை வரையில் நாளாந்தம் இரவு ஏழு மணி முதல் அதிகாலை நான்கு மணி வரையில் இது பொதுமக்களுக்கு திறந்திருக்கும்.பிரதமர் அலுவலகமும் கொழும்பு ஹுனுபிட்டிய கங்காராம விகாரையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த புத்த ரஸ்மி விசாக நோன்மதி வலயம் இம்முறை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



அலரி மாளிகை மற்றும் கங்காராம விகாரையை உள்ளடக்கிய வகையில் இது இடம் பெற்றுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனமற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு அலரி மாளிகையில் புனித பொருள்கள் காட்சிப்படுத்தும் நிகழ்வு ஆரம்பமானது.

வெசாக் வலயத்தில் இந்தியாவின் சாரணாத்தில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ள புனிதப் பொருள்களும், பாகிஸ்தானில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித பொருள்களும், அம்பாறையில் இருந்து பெறப்பட்ட லாஹுகல- நீலகிரிசாய அகழ்வின் மூலம் பெறப்பட்ட புனித பொருள்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.



# கொரிய அதிபர்களின் கை குலுக்கலினால்

# தென்கொரிய மக்கள் மத்தியில் மகிழ்ச்சி

ஏறக்குறைய 65 ஆண்டுகால பிரிவுக்குப் பிறகு வட கொரிய மற்றும் தென்கொரிய அதிபர்கள் வரலாற்று சந்திப்பை நிகழ்த்தியுள்ளனர். கொரியப் போர் ஓய்ந்த பிறகு தென் கொரிய மண்ணில் காலடி எடுத்துவைத்த முதல் வட கொரிய அதிபர் என்ற வரலாற்றுப் பெருமையைப் பெற்றுள்ளார் அதிபர் கிம் ஜாங் உன். நடந்து முடிந்த அமைதிப் பேச்சுவார்த்தையில் இரு நாட்டு அதிபர்களும் இனி எந்த இராணுவ மிரட்டல்களோ, அணு ஆயுதச் சோதனையோ செய்யப் போவதில்லை என்று முடிவு செய்துள்ளனர். உலக அரசியலில், பிராந்திய அரசியலில் இது ஒரு வரலாற்று நிகழ்வாகக் கருதப்படுகிறது.

அதே நேரம், தென்கொரிய நாட்டில் வசிக்கும் தமிழர்களும், அந்நாட்டு குடிமக்களும் இந்த நகர்வைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்?

தென்கொரியாவில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு காரணங்களுக்காகப் பல நாட்டவர்கள் உள்ளனர். அவர்களில் இந்திய மற்றும் இலங்கைத் தமிழர்கள் சுமார் 500 பேர் உள்ளனர். வட-தென் கொரிய அமைதி முயற்சிகள் இவர்களுக்கும், தென்கொரியக் குடிமக்களுக்கும் மகிழ்ச்சியையே தந்துள்ளது.

கியாங்கின் என்ற தென்கொரியப் பெண் இதுபற்றிக் கூறுகையில், நான் சிறு வயதுமுதல் கொரியப் போரைப் பற்றி புத்தகங்களில் படித்தும் என் தாய்-தந்தை சொல்லியும் அறிந்ததுண்டு. அவர்கள் ஒவ்வொரு முறையும் வட கொரியாவில் இருப்பவர்களும் நம் உறவினர்கள் தான் சில காலங்களுக்கு முன்பு நாம் பிரிந்து விட்டோம் என்று சொல்லும்பொழுது அவர்களை நேரில் பார்க்கும் காலம் வராதா என்று பல முறை ஏங்கியதுண்டு.

தற்பொழுது நடைபெற்ற பேச்சுவார்த்தை அதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன்.



இனி எங்கள் இரு நாட்டு மக்களும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். அனைவரும் விரைவில் ஒன்று சேருவார்கள். நானும் எங்கள் குடும்பத்தினரும் இந்த நகர்வை ஆக்கபூர்வ செயலாகக் கருதுகிறோம்." என்கிறார்.

"இருந்த போதிலும் இதைப்பற்றி சில சந்தேகங்களும் எனக்குள் இருந்தன. இத்தனை ஆண்டு காலம் பகையில் இருந்த வட கொரிய அதிபர் திடீரென மனம் மாற என்ன காரணம் என்று உறுதியாகச் சொல்லமுடியவில்லை. மூத்தவர்களிடம் இந்தக் கேள்வியை கேட்டபொழுது முடிவு மகிழ்ச்சி அளிக்கிறது.

ஆனால் அதிபர் கிம் ஏதேனும் மறைமுகத் திட்டம் வைத்திருக்கலாம் என்று கூறினார்கள். எனக்கும் அது போன்ற சந்தேகம் இருக்கிறது. ஆனால் காலங்கள் மாறி வருகின்றன. அதன் காரணமாகவே அதிபர் கிம், தன் பகையை மறந்து நாம் அனைவரும் சமாதானமாக இருந்திடுவிடலாம் என்று முடிவெடுத்திருக்கலாம். கண்டிப்பாக என் நாட்டு மக்கள் இனி கொரியப் போர் பற்றியோ அணு ஆயுத மிரட்டல் பற்றியோ கவலை கொள்ளாமல் நகர்வார்கள் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். எனவும் அவர் தெரிவித்தார்.

தென் கொரியாவில் சுமார் பன்னிரண்டு ஆண்டுகளாகப் பணி புரியும் தமிழகத்தைச் சேர்ந்த சரவணன் இது பற்றிக் கூறுகையில் வட கொரிய அச்சுறுத்தலை நான் பன்னிரண்டு ஆண்டுகளாக நன்கு கவனித்து வருகிறேன். அவர்களின் அணுகுண்டு சோதனை எனக்கு எந்த விதத்திலும் பயத்தை கொஞ்சம் கூட ஏற்படுத்தவில்லை. எனினும் தற்போதைய நிகழ்வு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இனி அணு ஆயுதச் சோதனைகள் இருக்காது என வட கொரிய அதிபர் கூறியிருக்கின்றமையால் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்." என்றார்.

மேலும் தொடர்ந்த அவர்," அதிபர் மூன் ஒரு வட கொரிய வம்சாவளியைச் சேர்ந்தவர் என்று என்னோடு பணிபுரியும் தென் கொரிய நண்பர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். வட கொரிய அதிபர் கிம்-முக்கும் தென் கொரிய அதிபர் மூனுக்கும் கண்டிப்பாக ஒரு பிணைப்பும் பாசமும் இந்த வகையில் இருக்க வாய்ப்புள்ளது. இதன் காரணமாகவும் இந்த அமைதிப் பேச்சுவார்த்தை சாத்தியமாகியிருக்கலாம். எது என்னவோ தமிழ் நாட்டிலிருந்து என் உறவினர்கள் கொரியாவில் போரா? என்று இனி என்னைக் கேட்கமாட்டார்கள், என்று கூறிச் சிரித்தார்.

இலங்கையைச் சேர்ந்த மோகன் கூறுகையில்; இரு நாட்டு அதிபர்களின் இந்த முடிவை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். ஒவ்வொரு நாளும் வட கொரிய அணு ஆயுத சோதனைகளைப் பற்றி தென் கொரிய ஊடகங்களில் காண்பிக்கும்பொழுது என்றைக்கு இவை மாறும் என்று கவலைப்பட்டதுண்டு.

ஆனால் இனி அப்படி இருக்காது என்று நினைக்கும் பொழுது மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த அமைதிப் பேச்சு மூலம் தென் கொரியநாட்டின் பொருளாதாரமும் கண்டிப்பாக வளர்ச்சி அடையும். ஆனால் அதேவேளையில் தற்போழுது தென்கொரியாவில் பணிபுரியும் மற்ற நாட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு குறையவும் வாய்ப்புள்ளது.

பிற்காலத்தில் வட கொரியாவைச் சேர்ந்தவர்கள் இங்குப் பணிக்கு அமர்த்தப்பட்டால் மற்ற நாட்டினருக்கு வேலை வாய்ப்பு மற்றும் வருமானம் குறையவும் வாய்ப்பிருக்கிறது. ஒருங்கிணைந்த கொரியாவாக உருவெடுத்தால் மிகப் பெரிய வல்லரசு நாடாக வருவார்கள்.- என்றார்.

தமிழகத்தைச் சேர்ந்த தினேஷ் கூறுகையில் எனக்கு இந்நிகழ்வு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. ஒரு வரலாற்று நிகழ்வை நான் அதே நாட்டில் இருந்து கொண்டு பார்க்கிறேன் என்பதில் ஆனந்தம். உலகமே கொரியாவில் போர் வரப்போகிறது என்று அஞ்சிய வேளையில் இருநாட்டுத் தலைவர்களின் ஒற்றுமை அமைதியைக் கொண்டுவந்துள்ளது. 2017 ஆம் ஆண்டு கொரியப் போர் அச்சம் உச்சத்தில் இருந்தது.

ஆனால் இன்று அதற்கு முடிவுகட்டி இரு நாட்டுத் தலைவர்களும் அனைவரின் நம்பிக்கையைப் பெற்றுவிட்டனர். இந்த தருணத்தை மொத்த ஆசிய மக்களும் கொண்டாட வேண்டும். என் பக்கத்து வீட்டுத் தென்கொரிய நண்பர்களிடம் இதுகுறித்து கேட்டபொழுது சிலர் புன்னகையோடு தாங்கள் இதை வரவேற்பதாகச் சொன்னார்கள்." என்றார்.

"மேலும் வட கொரிய அதிபர் கிம் என்னதான் போரும் வேண்டாம் என்று கூறினாலும் அவர் எந்த அளவுக்கு அந்தக் கொள்கையில் உறுதியோடு இருக்கப் போகிறார் என்பது கேள்விக் குறியாய் இருக்கிறது. ஊடகங்கள் முன்பு இருவரும் கைகுலுக்கிக் கொண்டாலும், இரு நாடுகளில் ஒன்று பொதுவுடைமைக் கொள்கையிலும் மற்றது மக்களாட்சிக் கொள்கையிலும் இருக்கின்றன.

வட கொரியா மக்களாட்சிக்கு மாற எந்த அளவுக்கு வாய்ப்பு உள்ளது என்று தெரியவில்லை. தற்போதைய பேச்சுவார்த்தை தென் கொரிய மக்களுக்கு ஒரு வித நிம்மதியையும் மகிழ்ச்சியையும் தந்தாலும் வட கொரிய மக்களுக்கு எந்த வகையில் இது பயனளிக்கும் என்று தெரியவில்லை.- என்றார். ★



கிம் ஜாங் உன் மறைமுகத் திட்டம் ஏதும் வைத்திருப்பாரோ என்றும் ஒரு சாராருக்கு சந்தேகம்!

## அழுத்தங்கள் தொடரும் – ட்ரம்ப்

கடந்த வெள்ளிக்கிழமை தென்கொரியாவோடு நடைபெற்றுள்ள உச்சி மாநாடு வெற்றியடைந்தாலும், வட கொரியா மீது அதிகபட்ச அழுத்தங்களை வழங்குவதைத் தொடரப்போவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருக்கிறார்.

அணு ஆயுதங்கள் இல்லாத கொரிய தீபகற்பத்தில் கொரியர்கள் எல்லாரும் ஒன்றாக வாழும் ஒரு நாள் வரும் என்று நம்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



கிம் ஜாங்-உன் மற்றும் அவரது மனைவி ரி சோல் ஜு (இடது), மூன் ஜே-இன் மற்றும் அவரது மனைவி கிம் ஜுங்-சூக் (வலது) வரக்கூடிய வாரங்களில் வட கொரிய தலைவர் கிம் ஜாங்-உன்னோடு நடைபெறும் சந்திப்பில் சாத்தியப்படுமானால், ஒப்பந்தம் ஒன்றை எட்டக்கூடிய பொறுப்பு தனக்கு உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

* * *

கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுதங்கள் இல்லாமல் ஆக்கவும், கொரியப் போரை முறையான முடிவுக்கு கொண்டு வரவும் பணியாற்ற வட கொரியத் தலைவர் கிம் ஜாங்-உன் மற்றும் தென் கொரிய அதிபர் மூன் ஜே-இன் ஆகியோர் இசைந்துள்ளனர். ஆனால், வட கொரியா இந்த விடயத்தில் ஆர்வம் கொண்டிருப்பதாக தோன்றுவது பற்றி ஆய்வாளர்கள் சந்தேகமான கருத்துக்களையே கொண்டுள்ளனர்.

**வட மற்றும் தென் கொரிய ஊடகங்களின் பார்வையில்**

கொரிய தீபகற்பத்தில் வளர்ச்சியை கொண்டுவருவதற்கானபுதியமைல்கல் என்று வெள்ளிக்கிழமை தென் கொரியாவோடு நடைபெற்ற உச்சிமாநாட்டை வட கொரிய செய்தி நிறுவனம் புகழ்ந்துள்ளது. (09 ஆம் பக்கம் பார்க்க...)



# கொரிய அதிபர்கள் சந்திப்பு

## 5 சுவாரஸ்யங்கள்

## 'சல்யூட்' அடித்த சமாச்சாரம்

கிம் ஜாங் – உன் மற்றும் மூன் ஜே – இன் உடனான சந்திப்பு, வட மற்றும் தென் கொரிய தலைவர்கள் இடையிலான மூன்றாம் சந்திப்பாகும்.
வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திப்பின் போது, கொரிய தீபகற்பத்தை அணு ஆயுதமற்ற பிராந்தியமாக மாற்றுவதற் கான நடவடிக்கைகளை எடுக்க இரு நாட்டு தலைவர்களும் உறுதி பூண்டுள் ளனர்.

இந்த சந்திப்பு பல அசாதாரண தருணங்களைச் சந்தித்தது.

### 1) தென் கொரியாவில் சந்தித்தது ஏன்?

தனது தலைவர் கிம் ஜாங்-உன், தென்கொரியாவுக்குச் சென்று மூன் ஜே-இன்னை சந்திக்க வட கொரியா ஒப்புக்கொண்டது.

2000 ஆம் ஆண்டு வட கொரியா வில் நடந்த முதல் கொரிய உச்சி மாநாட்டில், வட கொரிய தலைவர் கிம் ஜாங்-இல்-லை பார்த்து மறைந்த தென் கொரிய அதிபர் கிம் டே-ஜங் சொன்னது இப்போது நடந்துள் ளது.

அப்போதைய வட கொரிய தலைவர் கிம் ஜாங்-இல்லை விட, கிம் டே-ஜங் 17 வயது மூத்தவர். மூத்தவரை இளையவர் வந்து பார்ப்பதுதான் பொறுப்பு, எனவே கிம் ஜாங்-இல் தென் கொரியா வர வேண்டும் என கிம் டே-ஜங் கூறினார். ஆனால், அது நடைபெறவே இல்லை.

எனவே 1951 முதல் தென் கொரியாவுக்கு வரும்



முதல் வட கொரிய தலைவரான கிம், மூன் மீது மிகுந்த மரியாதை காட்டினார்.

ராணுவமயமற்ற எல்லைப் பகுதியில், கிம்மை வரவேற்ற மூன், தான் எப்போது வட கொரியா வரலாம் எனக் கேட்டார். பிறகு திடீரென ஒரு சம்பவம் நடந்தது.

தென் கொரிய அதிபர் மூன்னின் கையைப் பிடித்து, தன் நாட்டு எல்லை பக்கம் அழைத்துச் சென்ற கிம்,"இப்பொழுது எப்படி இருக்கிறது? எனக் கேட்டார்.

இந்தச் சந்திப்பு முழுவதும் தென் கொரிய அதிபர் மூன் மீது மிகுந்த மரியாதை காட்டினார் கிம். இது கொரிய தீபகற்பத்தில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என கிம்மின் அர்ப்பணிப்பைக் காட்டுகிறது.

### 2) காரைச் சுற்றி ஓடிவந்த பாதுகாவலர்கள்



வடகொரியாவின் மிக உயர்ந்த தலைவராக இருப்பதில் பல வசதிகள் உள்ளன – ஒரு பெரிய பாதுகாப்பு பரிவாரம் உட்பட. கிம்மின் பாதுகாப்பு படையினர், சந்திப்பு நடக்கும் எல்லா அறைகளுக்கும் சென்று முழு சோதனை நடத்தினர்.

கிம் அமர்ந்த நாற்காலியையும், அவர் உபயோகப்படுத்திய பகுதிகளையும் தூய்மைப்படுத்தும் மருந்து மூலம் கிம்மின் பாதுகாப்புப் படையினர் சுத்தப்படுத்தினர்.

100 நிமிட பேச்சுவார்த்தைக்குப் பிறகு கிம் மதிய



உணவுக்குச் சென்றபோது, அவரது பென்ஸ் காரை சுற்றி ஒரு டசின் பாதுகாவலர்கள் ஓடிவந்தனர். தனது படை பலத்தை வெளிப்படுத்தும் எதிர்பாராத செயலாக இது இருந்தது.

### 3) ஓர் அரிய கோரிக்கை

யிவோன்பியோங்தீவில் வாழும் இடம்பெயர்ந்த மக்களும், வட கொரியாவில் இருந்து தப்பித்துச் சென்றவர்களும் தங்களது சந்திப்பு குறித்து அதிக எதிர்பார்ப்புகளை வைத்துள்ளனர் என தென் கொரிய அதிபரிடம் வட கொரிய அதிபர் கிம் கூறினார்.

வட கொரியாவில் இருந்து தப்பித்து சென்றவர்களுக்கு ஆதரவாக கிம் பேசுவது அரிதானது. வட கொரியா, தனது நாட்டில் இருந்து தப்பித்துச் சென்றவர்களை துரோகிகளாகக் கருதுகிறது. இதற்காகத் தப்பித்து சென்றவர்களின் குடும்பங்கள் தண்டிக்கப்படலாம்.

வட கொரியாவின் முக்கிய உள்கட்டமைப்பு முன்னேற்றம் தேவை என்று கிம் ஒப்புக் கொண்டது மிகவும் சுவாரஸியமானது.

கொரிய மக்களால் புனிதமானதாகக் கருதப்படும் வட கொரியாவில் உள்ள பெய்ட் மலையில் ஏற தான் விரும்புவதாக கிம்மிடம் மூன் கூறினார்.

"அங்குள்ள மோசமான போக்குவரத்து உள்கட்டமைப்பு எனக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்துகிறது" என கிம் கூறினார்.

### 4) இரு பெண்கள்

மூன் மற்றும் கிம் இடையிலான ஆரம்பகட்ட பேச்சுவார்த்தை கிம்மின் சகோதரி கிம் யோ-ஜாங் மற்றும் முன்னாள் ராணுவப் புலனாய்வு அதிகாரியும், கொரிய உறவுகளின் முக்கிய கொள்கை வகுப்பாளருமான கிம் யோங்-சோல் மூலமே நடந்தது.

கிம்மின் மிக நெருக்கமான ஆலோசகர்கள் மற்றும் உதவியாளர்களான இவர்கள் இருவரும் ஒலிம்பிக்கின் போது தென்கொரியாவுக்கு பயணம் செய்தனர்.

பேச்சுவார்த்தையின் போது கிம் பேச வேண்டிய ஆவணங்களை, சந்திப்புக்கு முன்பு கிம் யோ-ஜாங் கொண்டு வந்தார்.

இவர்களுடன் பல மூத்த அதிகாரி களையும் கிம் அழைத்துச் சென்றார்.

> "ராணுவமயமற்ற எல்லைப் பகுதியில், கிம்மை வரவேற்ற மூன், தான் எப்போது வட கொரியா வரலாம் எனக் கேட்டார். பிறகு திடீரென ஒரு சம்பவம் நடந்தது. தென்கொரிய அதிபர் மூன்னின் கையைப் பிடித்து, தன் நாட்டு எல்லைப் பக்கம் அழைத்துச் சென்ற கிம்,"இப் பொழுது எப்படி இருக்கிறது? எனக் கேட்டார்."



### 5)அர்த்தம் மிகுந்த 'சல்யூட்'

வட கொரிய பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் பாக் யாங்க்-சிக் மற்றும் வட கொரிய ராணுவத்தின் தலைவரான வைஸ் மார்ஷல் ரி மியோங்-சூ ஆகியோர் மரியாதை நல்லெண்ணமாகத் தென்கொரிய அதிபர் மூனுக்கு 'சல்யூட் அடித்தனர்.

ஆனால், தென்கொரிய பாதுகாப்பு அமைச்சரும், ராணுவ தலைவரும் கிம்மிற்கு 'சல்யூட்' அடிக்கவில்லை.

தனது பங்காக, தென் கொரியா ராணுவ மரியாதையை ஏற்றுக்கொண்ட போது கிம் 'சல்யூட்' அடிக்கவில்லை.

இரு தலைவர்களும் ஒரு புதிய சமாதானத்தை ஆரம்பிக்க ஒப்புக் கொண்டுள் ளனர். ஆனால் கடுமையான பல சவால்கள் அவர்கள் முன் காத்திருக்கின்றன. ★



## அழுத்தங்கள் தொடரும் – ட்ரம்ப்

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதனை வரலாற்று சிறப்புமிக்க சந்திப்பு என்று கூறியுள்ள வட கொரிய அரசின் செய்தி ஊடகம், தங்கள் நாட்டின் தலைவர் கிம் ஜாங்-உன் மக்கள் மேல் வைத்திருக்கும் அன்பையும், சுயநிர்ணயத்திற்கான விருப்பத்தையும் இந்தச் சந்திப்புக் காட்டுகிறது என்று குறிப்பிட்டுள்ளது.

அதேவேளையில், இந்த உச்சி மாநாட்டுக்கு வரவேற்பு தெரிவித்திருக்கும் தென் கொரிய ஊடகங்கள், தன்னுடைய அணு ஆயுதங்களை கைவிடுவதற்கு வட கொரியாவிடம் இருந்து உறுதி எதுவும் வழங்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டி செய்திகளை வெளியிட்டுள்ளன.

வட கொரியாவுக்கு அதிகபட்ச அழுத்தங்களை தொடர்ந்து வழங்கப்போவதாக கூறியுள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் கூற்றை பிரதிபலிக்கும் வகையில், தடைகள் இன்னும் தொடர்ந்து தேவைப்படுவதாக அவை கருத்து தெரிவித்திருக்கின்றன.கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுதங்கள் இல்லாமல் ஆக்கவும், கொரியா போரை முறையான முடிவுக்கு கொண்டு வரவும் பணியாற்ற வட கொரிய தலைவர் கிம் ஜாங்-உன்னும், தென் கொரிய அதிபர் மூன் ஜே-இன்னும் இசைந்துள்ளனர். ★



# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 30

தரம்-5

பகுதி - II

33) ஆணிவேரைக் கொண்டிராத தாவரம்
1. பனை 2. ஈரப்பலா 3. ஆலமரம் 4.வேம்பு

34) பருப்புக் கறியில் அடங்கியுள்ள போசணைப் பொருள்
1. காபோகைதரேற்று 2. புரதம் 3.கொழுப்பு 4.விற்றமின்

35) மொட்டாக இருக்கும்போது பூவை பாதுகாக்கும் பகுதி
1. புறவிதழ் (புல்லி) 2. தம்பம் 3. அல்லி 4. சூலகம்

36) எண்ணெய் பெறப் பயன்படுத்த முடியாத வித்து
1. இலுப்பை 2. வேம்பு 3.தேங்காய் 4. குரக்கன்

37) தனியார் பஸ்களில் பயணம் செய்யும்போது ஏற்படக் கூடிய பிரச்சினைகள் பற்றி முறைப் பாட்டிற்காக அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
1. 1948 2. 1955 3.1919 4. 1929

38) யானைக்கால் நோயைப் பரப்புவது?
1. நுளம்பு 2. எலி 3. குரங்கு 4. பன்றி

39) மின்காந்தம் ஒன்றை செய்வதற்கு அவசியமற்றது?
1. உலர்மின்கலம் 2. அலுமினியத்தகடு
3. செப்புக்கம்பி 4. இரும்பாணி

40) இலங்கையில் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்?
1. மின்னேரியா 2. குமுனை 3.யால 4. கம்பஹா

41) பந்தலிட்டு வளர்க்கப்படும் கொடி?
1. பூசணி 2. புடோல் 3.வத்தாளை 4. வெள்ளரி

42) இலங்கை குடியரசான ஆண்டு?
1. 1948 2. 1970 3.1972 4. 1942

43) புத்தகங்களை சேதமாக்கும் பிராணி?
1.எலி 2. கரப்பான் 3. பல்லி 4. ஓணான்

44) விற்றமின் A குறைபாட்டினால் ஏற்படும் நோய்?
1. பெரிபெரி 2. ஸ்கேவி 3. என்புருக்கி 4. மாலைக்கண்

45) இலங்கையில் இரத்தினக்கல்லிற்கு பிரசித்திபெற்ற இடம்?
1. அநுராதபுரம் 2. பொலன்நறுவை 3. கண்டி 4. இரத்தினபுரி

46) பின்வருவனவற்றில் ஒரு வித்திலை தாவரம் அல்லாதது?
1. தென்னை 2. பாக்கு 3. நெல் 4. கத்தரி

47) பார்வையற்றவர்கள் பயன்படுத்தும் எழுத்து முறை?
1. தமிழ் அரிச்சுவடி 2. ஆங்கிலஅரிச்சுவடி 3. பிறேயில் 4. உரோமன்

48) அவுக்கன புத்தர் சிலையுள்ள இடம்?
1. அநுராதபுரம் 2. கண்டி 3.கேகாலை 4. பொலன்னறுவை

49) மழைவீழ்ச்சி அளவிடப்படும் அளவு?
1. mm 2. cm 3.ml 4. l

50) இலவசக் கல்வியின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
1.C.W.Wகன்னங்கரா 2. ஜகத் பண்டார
3. சேனநாயக்க 4.பண்டார நாயக்க

## வினாத்தாள் 28 இற்கான விடைகள் பகுதி I


| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 11) 2 | 21) 2 | 31) 2 |
| 2) 3 | 12) 3 | 22) 2 | 32) 2 |
| 3) 3 | 13) 3 | 23) 2 | 33) 1 |
| 4) 1 | 14) 1 | 24) 3 | 34) 1 |
| 5) 1 | 15) 2 | 25) 1 | 35) 2 |
| 6) 3 | 16) 2 | 26) 2 | 36) தொன்மை புதுமை |
| 7) 1 | 17) 1 | 27) 1 | 37) கொடையாளி உலோபி |
| 8) 2 | 18) 1 | 28) 3 | 38) பிரியம் வெறுப்பு |
| 9) 2 | 19) 2 | 29) 1 | 39) செல்வந்தன் வறியவன் |
| 10) 2 | 20) 2 | 30) 2 | 40) 2 |



## சிறுவர் பூங்கா




ஒருவர் காலடியில்
வாழ்வதை விட....
எழுந்து நின்று உயிரை
விடுவது எவ்வளவோ மேல்...
– சேகுவேரா –




படத்தில் காணப்படும் புள்ளிகளை இணையுங்கள் பார்க்கலாம்?

## 5 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்



## வினாத்தாள் 28 இற்கான விடைகள் பகுதி II

1) I.பொதுஅறிவு விடயங்களை அறிய உதவுகின்றது.
II.பாடம் சொல்லித் தருகின்றது.
2) இலத்திரனியல்
3) ஆசிரியர்
4) விசிறி , கீழ்க்கால்
5) 1. உபகரணம்
2.பூரணம்
6) 1. இலத்திரன் இயல்
2. சொல்லி தருகிறது.
7) 1. 2
2. 2
8) 1. இருக்கும்
2. உண்ணும்
9) 1. ஐம்பதில் வளையுமா?
2. புல்லுத் தின்னுமா ?
10) 1. மாணவி
2.ஓடுகிறான்
3.பெரிய
4. நீ
11) நூலகம் என்பது பூங்காடு
12) பெரியவர் அவனுடைய கேள்விக்கு பதில் சொல்லவில்லை
13) 1. குஞ்சு
2. பேத்தை
14) தீர்ப்பு
15) இலங்கை போக்குவரத்து சபை
16) பொருத்தமான வாக்கியம்
17) 1. தும்ரிய ஸ்தானய
2. புட்டுவ
18) 1. எத்தனை
2. இறக்கம்
19) 1. நான் ஐஸ்கிறீம் சாப்பிட விரும்புகிறேன்.
2. கவனமாக இருக்கும்.
20) 1.Can you help me?
2. I am sorry
21) 1. you
2. Is
22) இரண்டாயிரத்து ஐநூற்று ஐம்பத்து இரண்டு.
23)



24) 5
25) 4 பேர்
26) ரூபாய் 60 000
27) 3 km 110 m
28) 2/8
29) 15 : 15
30) கனவுரு
31) 2
32) 2
33) 3
34) 1
35) 3
36) 2
37) 1
38) 1
39) 2
40) 2
41) 3
42) 4
43) 3
44) 1
45) 2
46) 3
47) 2
48) 3
49) 2
50) 3



## தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்'
சிறுவர் சஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

# மனித உரிமையைப் பாதுகாப்பது ஆட்சியாளர்களின் பிரதான கடமை

## வெசாக் தின வாழ்த்துச் செய்தியில் பிரதமர் ரணில்

கொழும்பு, ஏப். 30

போலியற்ற உண்மையான கருத்துப் பரிமாற்றத்திற்கு இடமளிக்கப்படுவது, மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் சூழலொன்றை உருவாக்குவதும் ஆட்சியாளரின் பிரதான கடமை எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வெசாக் தினத்தையொட்டி தாம் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

புத்த பெருமான் காட்டித் தந்த தர்மத்தின் வழியில் நாம் எந்தளவு பயணித்துள்ளோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க இந்த வெசாக் தினம் சிறந்த சந்தர்ப்பமாகும்.

ஆட்சியாளர் அனைத்து சமூகப் பிரிவினருக்கும் நன்னெறியுடன் பாதுகாப்பினை



வழங்கவேண்டும்.

மக்களுக்கு உரித்தான வற்றை தடையின்றி அனுபவிப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கக் கூடிய உயிர்ப் பாதுகாப்பு மிக்க குடும்ப வாழ்வு பாதுகாக்கப்படும் என சக்கவத்தி சீஹநாத சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்காக கடுமையான கஷ்டங்களுக்கு மத்தியில் அரசு என்ற வகையில் நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படும் தார்மீக சமூகம் என்பதை யதார்த்தமாக மாற்றுவது கற்றறிந்த நற்பண்பு மிக்க அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பாகும் என்பதை நாம் அறிவோம்.

அன்பு, பரிவிரக்கம், கருணை, மனஅமைதி என்பவற்றை முதலாகக் கொண்ட புத்த பெருமான் போதித்த தர்ம மார்க்கம் அந்த சமூகத்தைக்கட்டியெழுப்புவதற்குத் தேவையான பலமான அடிப்படையை வழங்குகிறது என்பதில் சந்தேகமில்லை.

சமூகத்தின் சிறந்த இருப்புக்காக பௌத்த மதத்தை உரிய முறையில் பின்பற்றுவதற்கு இந்த வெசாக் தினத்தில் உறுதிபூணுவோம்.

அதற்காக அனைவரது உள்ளங்களும் ஒளிபெறும் இனிய வெசாக்திருவிழாவாக அமையட்டும் என வாழ்த்துகின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# பவித்ராவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை?

கொழும்பு, ஏப். 30

நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாரச்சி மற்றும் அவரது கணவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாரச்சி மற்றும் அவரது கணவரான சப்ரகமுவ மாகாண சபையின் தவிசாளர் கஞ்சன ஜயரத்ன ஆகியோர் சுதந்திரக் கட்சிக்குள் இருந்து கொண்டே மஹிந்த அணிக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றனர்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது மஹிந்த ஆதரவு பொதுஜன பெரமுன கட்சியால் கைப்பற்றப்பட்ட இரத்தினபுரி நகரசபைக்கான முதல்வர் தெரிவின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் தனக்குத் தேவையான ஒருவரை முதல்வராக தெரிவு செய்வதற்கு பவித்ரா வன்னியாரச்சி செயற்பட்டிருந்தார்.

இதற்காக அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டு பொதுஜன பெரமுன கட்சியின் தலைமைத்துவத்துக்கு தனது முடிவை ஏற்றுக்கொள்ளுமாறு அழுத்தம் கொடுத்திருந்தார்.

இது குறித்து பவித்ரா மற்றும் அவரது கணவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர்கள் வாக்குறுதியளித்திருந்த போதிலும் இதுவரை அதனை மேற்கொள்ளவில்லை.

எனவே பவித்ரா மற்றும் கஞ்சனவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நேற்றுமுன்தினம் இரத்தினபுரியில் பொதுஜன பெரமுன முக்கியஸ்தர்கள் ஊடக சந்திப்பொன்றை நடத்தியிருந்தனர்.

சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் ரஞ்சித் பண்டாரவின் இல்லத்தில் இந்த ஊடக சந்திப்பு நடைபெற்றுள்ளது.



ஜனாதிபதியின்

# வெசாக் தின வைபவத்தில் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 30

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பிங்கிரிய தேவகிரி ரஜமஹா விகாரையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரச வெசாக் தின வைபவத்திற்கு வந்திருந்த ஒருவர் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கொழும்பு மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்த 57 வயதான நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அரச புலனாய்வு சேவையின் அதிகாரி ஒருவர், ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவுக்கு வழங்கிய தகவலை அடுத்தே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றின் போதும் இந்த நபர் கத்தரிக்கோலுடன் மண்டபத்திற்கு நுழைய முயற்சித்துள்ளார் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.



கொழும்பில் இருந்து பிங்கிரிய வரை வந்தமைக்கான காரணத்தை சந்தேக நபர் பொலிஸாரிடம் இதுவரை வெளியிடவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள மங்கள தொடர்பான செய்தி



கொழும்பு, ஏப். 30

பிரித்தானியா சென்ற இலங்கையின் நிதி அமைச்சர் அங்கு போதையில் தள்ளாடினார் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

லண்டனில் நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் அவரது செயலாளர் ஆகியோர் குடி போதையில் மிதந்தனர் எனக்காட்டும் புகைப்படங்களை அந்த ஊடகம் வெளியிட்டு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

லண்டனில் இடம்பெற்ற வர்த்தக சந்திப்பில் கலந்து கொள்வதற்காக உத்தியோகபூர்வமாக சென்ற நிலையில், மக்களின் வரிப்பணத்தில் இப்படி அவர்கள் விருந்து வைத்தனர் என சமூக வலைத்தளங்களில் கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றன.

எனினும், அந்த புகைப்படம் இலங்கையின் பிரபல நிறுவனம் ஒன்றின் உரிமையாளராலேயே இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது என மங்கள தரப்பு ஊடகமொன்று பதிலடிச் செய்தி வெளியிட்டுள்ளது.

லண்டனில் வாழும் இலங்கை ஊடகவியலாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தில் மங்கள சமரவீர கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படம் எனத் தெரிவித்து அதனை மேற்படி நிறுவன உரிமையாளர் வெளியிட்டுள்ளார். எனக் கூறப்படு கின்றது.

இந்த விருந்து லண்டனில் வசிக்கும் இலங்கை ஊடகவியலாளரினால் அவரது பணத்தில் நடத்தப்பட்டது என்றும், இந்த விருந்தில் ஜனாதிபதியின் ஊடக இயக்குநர் சமீர டி சில்வாவும் கலந்து கொண்டிருந்தார் என்றும் மேலும் குறிப்பிடப்படுகின்றது.

எனினும், இந்தப் படத்தை வெளியிட்ட மேற்படி நிறுவனத்தின் உரிமையாளர் அந்த விருந்தில் விசேட விருந்தினராக கலந்து கொண்டிருந்தார் என விருந்தை ஏற்பாடு செய்த – லண்டனில் வசிக்கும்– இலங்கை ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார் என மேலும் கூறப்பட்டது.

# பண நோட்டுக்களை விநியோகித்து வெசாக் தானம் வழங்கிய அபூர்வமான சம்பவம்!

கொழும்பு, ஏப். 30

பண நோட்டுக்களை விநியோகித்து வெசாக் தானம் வழங்கிய அபூர்வமான சம்பவம் ஒன்று மாவனல்லைப் பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது.

சப்ரகமுவமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் இந்துனில் திசாநாயக்க தனது பெற்றோருக்கு புண்ணியம் தேடி இந்த தானத்தை வழங்கியுள்ளார்.

இவர் சுதந்திரக் கட்சியின் சார்பில் மாகாணசபையில் உறுப்பினராகக் கடமையாற்றியிருந்தார்.

நேற்றுக் காலை அவரது வீட்டின் முன்பாக 9.30 மணியளவில் ஆரம்பமான பண நோட்டுக்கள் தானம் வழங்கும் நிகழ்வு சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக நடைபெற்றுள்ளது.

இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் புத்தம் புதிய நூறு ரூபா வீதம் வழங்கப்பட்டதுடன், இந்துனில் திசா நாயக்க தனது கையாலேயே அனைவருக்கும் பணநோட்டுக்களை விநியோகித்து உள்ளார்.

இதற்கிடையே இந்துனில் திசாநாயக்க கள்ள நோட்டுக்களை விநியோகிக்கிறார் என ஐக்கிய தேசியக்கட்சியின் அந்தப் பகுதியில் பிரசாரமொன்றை மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மக்கள் மற்றும் சர்வதேச நிபுணர்கள் முன்னிலையில்

# அணு சோதனைக் கூடங்களை மூடவுள்ளது வடகொரியா!

மக்கள் முன்னிலையில் அணு சோதனை கூடங்களை வடகொரியா இழுத்து மூடவுள்ளது என தெரிவிக்கப் படுகிறது.

சர்வதேச நாடுகளை அச்சுறுத்தும் வகையில் வடகொரியா அணு ஆயுத சோதனைகளை மேற்கொண்டு வந்தது. இதனால் அமெரிக்கா உட்பட பல நாடுகள் வடகொரியா மீது பல் வேறு பொருளாதாரத் தடைகளை விதித்தது.



இந்த நிலையில் 65 ஆண்டுகள் நிலவிய பகையை மறந்து வட, தென்கொரிய அதிபர்கள் அண்மையில் சந்தித்து பேச்சு நடத்தினர்.

இந்தப் பேச்சின் முக்கிய அம்சமே கொரிய பிராந்தியத்தில் அணு ஆயுத சோதனைகளை கைவிடுவது என்பது தான்.

கிம் ஜாங் உன் - மூன் ஜேன் இன பேச்சு வெற்றிகரமாக முடிந்துள்ள நிலையில், எதிர்வரும் மே மாதம் பொதுமக்கள் மற்றும் சர்வதேச நிபுணர்கள் முன்னிலையில் அணு சோதனை கூடங்களை வடகொரியா மூடும் என தென்கொரிய ஜனாதிபதியின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

ஜூன் மாதத்தில் கிம் ஜாங் உன் - ட்ரம்ப் சந்திப்பு நடக்க உள்ள நிலையில், இது ஒரு முக்கிய நகர்வாக பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.



# காஸாவில் இஸ்ரேல் விமான தாக்குதல்!

காஸா போருக்கு பின்னர் முதன் முதலாக காஸா பகுதியில் இஸ்ரேல் விமானத் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளது.

இஸ்ரேல் எல்லையில் கடந்த ஐந்து வாரங்களாக பாலஸ்தீனர்கள் நடத்தி வரும் போராட்டத்துக்கு பதிலடியாக, காஸா பகுதியிலுள்ள ஹமாஸ் நிலைகள் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.

6 இடங்களில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் யாரும் காயமடையவில்லை என்றாலும், துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த படகுகள் எரிந்து நாசமாகின எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 2014 ஆம் ஆண்டு நடைபெற்றகாஸாபோருக்குப் பிறகு, காஸா பகுதியில் படகுகளைக் குறிவைத்து இஸ்ரேல் நிகழ்த்திய முதல் விமானத் தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# மாலியில் தாக்குதல்: 40 அப்பாவிகள் பலி!

மாலியில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 40 பேர் பலியாகியுள்ளனர்.

மாலி நாட்டின்சில பகுதிகளில் கிளர்ச்சியாளர்கள்வன்முறைதாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், வடக்கு மாலியின் மேனகா பகுதியில் அவர்கள் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதுபற்றி அந்த பகுதியின் ஆளுநர் டாவுடா மைகா செய்தியாளர்களிடம் கூறும்பொழுது-

அவகாசா மற்றும் ஆன்டிரன் பவுகேன் ஆகிய கிராமங்களில் கிளர்ச்சியாளர்கள் என சந்தேகிக்கப்படுபவர்கள் 2 முறை தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.



இந்த தாக்குதல் சம்பவத்தில் டுவாரெக்ஸ் என்ற பழங்குடியின மக்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் என 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

# ஏமனில் வான்வழி தாக்குதல்: தலைவர்கள் உட்பட 38 பேர் பலி!



ஏமன் தலைநகரில் மேற் கொள்ளப்பட்ட வான்வழி தாக்குதலில் 38 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஏமன் தலைநகர் சனாவில், ஹூதி கிளர்ச்சியாளர்களின் உயர்நிலைக் குழுக் கூட்டத்தைக் குறிவைத்து சவூதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படைவான்வழிதாக்குதல்நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் 38 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில், ஹூதி கிளர்ச்சிப் படையின் முக்கியத் தலைவர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வெள்ளிக்கிழமை நடத்தப் பட்ட இந்தத் தாக்குதலில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கின்றனர் என சவூதி அரசு ஊடகங்கள் தெரிவித்தாலும், யேமன் உள்துறை அமைச்சக் கட்டடத்தில் நடத்தப்பட்ட அத் தாக்குதலில் 38 பேர் பலியாகியுள்ளனர் என அல்-அரேபியா தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. (க)



# மியன்மாரில் தொடரும் வன்முறை

## 3 வாரங்களில் 4,000 பேர் வெளியேற்றம்!

வடக்கு மியன்மாரில் தொடரும் வன்முறை காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறியுள்ளனர் என ஐ.நா தெரிவித்துள்ளது.

சீனாவையொட்டிய மியன்மாரின் வடக்கு எல்லை மாகாணமான காசினில், பாதுகாப்புப் படையினருக்கும், அந்தப் பகுதியைச் சேர்ந்த சிறுபான்மை ஆயுதக் குழுவுக்கும் இடையே நடந்து வரும் போர் காரணமாக, கடந்த 3 வாரங்களில் மட்டும் 4 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தங்களது வீடுகளைவிட்டு வெளியேறியுள்ளனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

அந்த நாட்டின் மேற்குப் பகுதியில் ரோஹிங்யா சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்சினை நீடித்து வரும் நிலையில், வடக்கே உள்ள காசினில் வசிக்கும் சிறுபான்மை இனத்தவர்களும் அதிக உரிமை கேட்டு ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மாணவருக்கு கத்திக் குத்து: சாவு எண்ணிக்கை 9 ஆக அதிகரிப்பு

சீனாவின் வடக்கு பகுதியில் அமைந்துள்ளது ஷாங்க் மாகாணத்தில் உள்ள மிசிக்வுண்டி பாடசாலையில் மாணவர்கள் பாடசாலை நிறைவடைந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த 28 வயது நபர், திடீரென தன்னிடம் இருந்த கத்தியால் மாணவர்களை சரமாரியாக தாக்கியுள்ளார்.

இதனால், மாணவர்கள் அலறியடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்துள்ளனர். ஆனாலும் இந்தத் தாக்குதலில் ஏழு மாணவர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக பலியாகியுள்ளனர்.

மேலும், 12 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் படுகாயம் அடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் முதல்கட்ட செய்திகள் தெரிவித்தன.

ஆனால் தற்போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9 ஆக அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறந்தவர்களில் 7 பெண்கள், 2 ஆண்கள் என்பதும், தாக்குதல் நடத்தியவர் முன்னாள் மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த கத்திக்குத்து சம்பவத்தை நடத்திய 28 வயதான ஜாவோ என்பவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடத்திய முதல் கட்ட விசாரணையில், தான் அந்தப் பள்ளியில் படித்த காலத்தில் தன்னோடு படித்த மாணவ, மாணவிகள் மீது வெறுப்பு ஏற்பட்டது என்றும், அதன் அடிப்படையில்தான் இப்போது அந்தப் பாடசாலையில் கத்திக்குத்து சம்பவத்தை நடத்தினேன் என கூறியுள்ளார்.



# புலிகளை மீளக் கட்டியெழுப்ப முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் நால்வருக்கு சிறைத்தண்டனை!

இராமநாதபுரம், ஏப். 30

விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஆயுதங்களையும், பொருள்களையும் இலங்கைக்கு கடத்த முயன்றார்கள் என்று குற்றம்சாட்டப்பட்ட நான்கு பேருக்கு, தமிழ்நாட்டின் இராமநாதபுரம் நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கிருஷ்ணகுமார், சுபாஸ்கரன் ஆகிய இருவருக்கும் தலா 10 ஆண்டுகளும், இராஜேந்திரன், சசிகுமார் ஆகிய இருவருக்கும் தலா மூன்றரை ஆண்டுகளும் சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் நால்வரும், கடந்த 2014 ஆம் ஆண்டு இராமேஸ்வரம் அருகே கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து ஒரு தொகை சயனைட், மற்றும் புவிநிலைகாட்டி கருவிகள் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளமைப்பதற்காக, இவற்றை இலங்கைக்கு கடத்துவதற்கு முயன்றார்கள் என்று இவர்கள் நால்வர் மீதும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.





# மே 16 முதல் கமல்ஹாசன் சூறாவளி சுற்றுப்பயணம்!

சென்னை, ஏப். 30

மக்களுடனான பயணம் என்ற பெயரில் மே மாதம் 16 ஆம் திகதி முதல் பல்வேறு நகரங்க ளுக்கு மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார்.

மக்கள் நீதி மய்யம் என்ற பெயரில் கட்சி தொடங்கியுள்ள கமல்ஹாசன் சமீபத்தில் மாதிரி கிராம சபை நடத்தி உள்ளாட்சி அமைப்பு பற்றி அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று பேசினார்.

அத்துடன், உள்ளாட்சி தேர்தலிலும் போட்டியிட உள்ளேன் என்றும் அவர் கூறியிருந்தார்.

இந்த நிலையில், மக்களுடனான பயணம் என்ற பெயரில் அடுத்த மாதம் 16 ஆம் திகதி கன்னியாகுமரியில் சுற்றுப்பயணத்தை அவர் தொடங்க உள்ளார்.

17 ஆம் திகதி தூத்துக்குடி, 18 ஆம் திகதி திருநெல்வேலி ஆகிய ஊர்களுக்கு செல்கிறார். இரண்டாம் கட்டமாக ஜூன் மாதம் 8 ஆம் திகதி திருப்பூர், 9 ஆம் திகதி நீலகிரி மற்றும் 10 ஆம் திகதி கோயம்பத்தூர் ஆகிய ஊர்களுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளார்.

# ஆர்.கே நகரில் 20 ரூபா தாளைக் காட்டி தினகரனுக்கு எதிராக மக்கள் போராட்டம்

சென்னை ஆர்.கே நகரில் நலத்திட்ட உதவிகள் வழங்க வந்த டி.டி.வி. தினகரனுக்கு எதிர்ப்பு தெரிவித்து 20 ரூபா நோட்டைக் காட்டி பலர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னை ஆர்.கே.நகர் தொகுதியில் கடந்தாண்டு நடந்த இடைத்தேர்தலில் டி.டி.வி. தினகரன் வெற்றி பெற்றார்.

தேர்தல் பிரச்சாரத்தின் போது வாக்காளர்களுக்கு 20 ரூபாவை டோக்கன் போல வழங்கி, தேர்தலுக்கு பின்னர் 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என அவரது ஆதரவாளர்கள் வாக்கு சேகரித்தனர் எனப் புகார் எழுந்தது.

இந்த நிலையில், ஆர்.கே நகரில் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காக டிடிவி தினகரன் அங்கு வந்துள்ளார்.

அவரது வருகையின் போது பொதுமக்கள்



பலர் 20 ரூபா நோட்டை காட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# காங்கிரஸ் அன்பை விதைத்தது பா.ஜ.க. வெறுப்பை விதைக்கிறது

காங்கிரஸ் இல்லாமல் விவசாயிகளால் வாழ முடியாது. காங்கிரஸ் எதிர்க்காவிட்டால் அவர்களின் நிலங்களை மோடி பிடுங்கியிருப்பார் என ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

தலைநகர் டில்லியில் 'ஜன் ஆக்ரோஷ்' என்ற பெயரில் ஒரு மாபெரும் பேரணியும், பிரம்மாண்டமான பொதுக் கூட்டத்தையும் காங்கிரஸ் கட்சி நேற்று நடத்தியது. அந்தக் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி தலைமை ஏற்று நடத்தும் இந்த கூட்டத்தில் சோனியா காந்தி, மன்மோகன் சிங் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ராகுல் காந்தி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மோடி ஆட்சியில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு முக்கிய பொறுப்புகள் வழங்கப்படுகின்றன. தலித், சிறுபான்மை மக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

ஆனால், மோடி அமைதியாக உள்ளார். பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ். மக்களிடையே வெறுப்பை விதைக்கின்றன. ஆனால், காங்கிரஸ் 70 ஆண்டுகளாக அன்பை விதைத்தது.

மக்களின் பணம் நிரவ் மோடி போன்றவர்களின் சட்டைப் பையில் உள்ளது. காங்கிரஸ் இல்லாமல் விவசாயிகளால் உயிர்வாழ முடியாது. காங்கிரஸ் மட்டும் எதிர்க்காவிட்டால் விவசாயிகளின் நிலத்தை மோடி பிடுங்கியிருப்பார். ஜனநாயக அமைப்புகளை மோடி பலவீனப்படுத்தி வருகிறார்.

வேலைவாய்ப்பு இல்லாமை, அடாவடி வரி விதிப்பு முறை போன்றவற்றை மோடி கொண்டு வந்துள்ளார். அவர் கட்சி எம்.எல்.ஏ.க்கள் பெண்களிடம் அடாவடித்தனம் செய்து வருகின்றனர். கர்நாடக தேர்தல் மட்டுமல்ல வரும் அனைத்து தேர்தல்களிலும் காங்கிரஸ் வெற்றி பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



ராகுல் காந்தி கூறுகிறார்

# 'அம்மா அணி' என்ற புதிய கட்சியை தொடங்கினார் திவாகரன்!

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் சசிகலா தம்பி திவாகரன் 'அம்மா அணி' என்ற பெயரில் புதிய கட்சி தொடங்கியுள்ளார். இதன் தொடக்கவிழா நேற்றுக் காலை நடைபெற்றது.

சசிகலாவின் சகோதரர் திவாகரனுக்கும், அம்மா மக்கள் முன்னேற்ற கழக துணை பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரனுக்கும் இடையே உச்சக்கட்ட மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் திவாகரன் 'அம்மா அணி' என்ற புதிய கட்சியை தொடங்கியுள்ளமை அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பேரையூர் பாண்டியன், இளந்தமிழன், ரிஷியூர் தமிழ்செல்வம், அம்மாபேட்டை தினகரன், எம்.என். பி.ராஜா, எம்.என்.பி பாலு, உள்பட 100 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதையடுத்து திவாகரன் ஊடகங்களுக்குப் பேட்டி அளித்தார்.

இதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

'அம்மா அணி' இன்று (நேற்று) முதல் உயிர்ப்பிக் கப்படுகின்றது. இளைஞர்களை அதிகம் சேர்த்து அறிவியல் பூர்வமாக சிந்தித்து உயர்ந்தபட்ச அமைப்பாக இது செயல்படும். சென்னையிலும் தலைமை அலுவலகம் ஒன்று திறக்கப்படும்.

எம்.ஜி.ஆர்- ஜெயலலிதாவின் கொள்கையையொட்டி சசிகலாவின் வழிகாட்டுதலுடன் நான் தலைமை ஒருங்கிணைப்பாளராக செயல்படுவேன். விரைவில் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்ய உள்ளேன். அதன்பிறகு புதிய நிர்வாகிகள் நியமனம் செய்யப்படுவர்.

எம்.ஜி.ஆர் காலத்தில் இருந்து நான் அ.தி.மு.க.வில் பணியாற்றியுள்ளேன். ஜெயலலிதாவை பொதுச் செயலாளராக்கியதில் எனக்கு முழு பங்கு உண்டு. ஜெயலலிதா பொதுச் செயலாளரான தற்கு பிறகு நான் பரிந்துரைத்த நண்பர்களும், ஆதரவாளர்களுமே கட்சி நிர்வாகிகளாகப் பொறுப்பேற்றனர். அவர்கள் இன்னும் என்னுடன் தொடர்பில் தான் உள்ளனர்.

தற்போது டி.டி.வி. தினகரனின் செயல்பாடுகளை கடுமையாக விமர்சிக்கின்றனர். தினகரனின் செயல்பாடுகள் அனைத்தும் பொய், புரட்டு மாயையை ஏற்படுத்துவது போன்ற செயல்பாடுகளாக தான் உள்ளன.

தினகரன் கட்சியில் மாநிலப் பொறுப்பாளர்கள் அனைவரும் தினகரனுக்கு நெருங்கிய உறவினர்கள்தான். தினகரன் தன்னிச்சையாகச் செயல்படுகின்றார். வருகின்ற உள்ளாட்சித் தேர்தல் தொடங்கி அனைத்து தேர்தல்களிலும் தொண்டர்களின் மனநிலை அறிந்து செயல்படுவோம். விரைவில் மாநில பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் நியமிக்கப்படுவார்கள். அதன்பிறகு நகரம், பேரூராட்சி, கிளை வாரியாக நிர்வாகிகளை நியமிப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# வீட்டைத் திறந்து வைத்து விட்டு உறங்கியவர் பணத்தை இழந்தார்

## முல்லை. குமுழமுனையில் சம்பவம்

முல்லைத்தீவு, ஏப். 30
முல்லைத்தீவில் ஹார்ட்வெயார் நிலையம் ஒன்றின் வியாபாரப்பணம் இரண்டுலட்சம் ரூபா நேற்றுமுன்தினம் திருடிச் செல்லப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வர்த்தகநிலையத்தில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு பத்து மணியளவில் வியாபாரப் பணம் உரிமையாளரால் எடுத்து வரப்பட்டுள்ளது.

இந்நிலையில், வியாபார நிலையத்தின் உரிமையாளர் உறங்கிய பின்னர் வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் அந்தப் பணத்தைத்திருடிச்சென்றுள்ளனர் என உரிமையாளரால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வர்த்தகர், நேற்றுமுன்தினம் இரவு அதிகவெப்பம் காரணமாக முல்லைத்தீவு குமுழமுனையில் உள்ள தனது வீட்டின் கதவைத் திறந்துவைத்து விட்டு, அன்றைய வியாபாரப் பணமான இரண்டு லட்சம் ரூபாவைப் பாதுகாப்பான இடத்தில் வைத்து விட்டு வீட்டிற்குள் படுத்து உறங்கியுள்ளார்.

எனினும், வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் அந்தப் பணத்தைத் திருடிச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனநாயகக் கட்சியின்செயலாளர்நாயகம் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமது கட்சியின் தலைமை படுத்திக் காட்டியிருந்தோம்.

ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தால் அவ்வாறானதொரு சாதகமான நிலை எம்மிடம் குறைவானதாக இருப்பதனால் மக்களது பிரச்சினைகளை நிவர்த்திசெய்து



அலுவலகத்திற்கு நேற்றுச் சென்ற – சுகாதார ஊழியர்கள் மற்றும் நேர்முகத் தேர்வுக்கு உள்வாங்கப்படாத தொண்டராசிரியர்களுள் ஒரு தொகுதியினர் – தமது பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுத் தருமாறுகோரிச் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

பல வருடகால யுத்தத்திற்கு முகங்கொடுத்து அதிலிருந்து மீண்டுவரும் எமது மக்களின் வாழ்வாதார முறை சிறந்ததாக அமையவேண்டும் என்பதற்காக நாம் கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு நடைமுறைப் கொடுப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றன.

எனவே வெளிப்படையாகவும் மக்கள் நலன்களில் அக்கறையுடனும் இருந்து செயற்படும் எமது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கரங்களுக்கு தமிழ் மக்களின் அரசியல் அதிகாரங்கள் கிடைக்கப் பெறவேண்டும். அவ்வாறானதொரு சந்தர்ப்பம் உருவாக்கப்படும்போதுதான் எமது மக்கள் எதிர்கொள்ளும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வை பெற்றுக் கொள்ள முடியும்.

அந்தவகையில் உங்களது பிரச்சினைகள் தொடர்பில் துறைசார்ந்தவர்களுடன் ஆராய்ந்து தீர்வுகளைப் பெற்றுத் தருவதற்கான முயற்சிகளை காலக் கிரமத்தில் மேற்கொள்வேன். – என்றார். (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய அமைச்சரவை நியமனம் தொடர்பாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், கடந்த வெள்ளிக்கிழமை மாலை நீண்டநேரம் பேச்சுக்களை நடத்தினர்.

இதன்போதே, புதிய அமைச்சரவை பதவியேற்பு தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பேச்சுக்களில் பிரதமருடன், அமைச்சர் மலிக் சமரவிக்ரமவும் கலந்து கொண்டார் (ஐ)

## தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காணாமற்போயுள்ளார்.

இவர், கடந்த 3 மாதங்களாக, விழுப்புரம் மாவட்டம், சின்ன சேலம் இலங்கை அகதிகள் முகாமில் உள்ள தனது பாட்டி வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

இந்த நிலையில், கடந்த 24ஆம் திகதி காலை 9.30 மணியளவில் வீட்டிலிருந்து வெளியே சென்ற அவர் இதுவரை மீண்டும் வீடு திரும்பவில்லை.

இது குறித்து சின்னசேலம் பொலிஸ் நிலையத்தில் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஐ)

# சிறைக்குள் தொலைபேசி பாவித்த வழக்கிலிருந்து முருகன் விடுவிப்பு

## தமக்குத் தாமே வாதாடி வென்றார்

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளியாகச் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் முருகன் பிறிதொரு வழக்கில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.



வேலூர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முருகனை வேலூர் முதலாவது குற்றவியல் நடுவர் நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது. வேலூர் சிறைச் சாலைக்குள் முருகன் தொலைபேசி பயன்படுத்துகின்றார் எனப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது, இரண்டுகைபேசிகளும், இரண்டு சிம் அட்டைகளும் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணை வேலூர் முதலாவது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் இடம் பெற்றுள்ளது.

வழக்கில் தாமே வாதாட அனுமதிக்க வேண்டும் என்று முருகன் கோரிக்கை முன்வைத்த நிலையில், அதற்கான அனுமதி நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தாமாக வாதாடிய முருகன், 7 அரசு தரப்பு சாட்சியங்களிடம் குறுக்கு விசாரணை மேற்கொண்டார். இதன்போது முருகனுக்கு எதிராகப் போதிய ஆதாரங்கள் அரசதரப்பினால் முன்வைக்கப்படவில்லை. இந்நிலையில் சிறைச்சாலைக்குள் முருகன் கையடக்க தொலைபேசி பயன்படுத்தினார் எனத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

## சிறுபான்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பதவிகள் அனைத்தையும் தனது கல்லூரியான றோயல் கல்லூரியின் பழைய மாணவர்களுக்கே தாராளமாக அள்ளி வழங்கியிருக்கின்றார் என்றும் குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது.

கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ, உதவித் தலைவர் ரவி கருணநாயக்க, தேசிய அமைப்பாளர் நவீன் திஸநாயக்க. கட்சித் தவிசாளர் கபிர் கஸிம், கட்சிப் பொருளாளர் ஹர்ஷா டி சில்வா, பிரதிப் பொதுச் செயலாளர்ருவன்விஜேவர்த்தனா ஆகிய அனைவருமே கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர்கள் ஆவர்.

ஆக, கட்சியின் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்ட அகில விராஜ் காரியவசமே றோயல் கல்லூரியைச் சாராதவர்.

கட்சியின் அரசியல் குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள அகிலவிராஜ்காரியவசம், நவீன் திஸநாயக்க, ஹரீன் பெர்னாண்டோ, ரஞ்சித் மத்தும பண்டார, மங்கள சமரவீர, அஜித் பெரேரா, இரான் விக்கிரமரத்ன, கே.ஸி.அளவத்துவெல, ருவான் விஜேவர்த்தன, கயந்த கருணாதிலக, நளின் பண்டார, அசோகா பிரியந்த ஆகிய அனைவருமே சிங்களவர்கள்.

இதில் தமிழர்களுக்கோ, முஸ்லிம்களுக்கோ, மகளிருக்கோ பெயருக்குத்தன்னும் இடமளிக்கவில்லை என ஐ.தே.கட்சியின் சிறுபான்மைத் தரப்பிலிருந்து குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (உ)

## வெள்ளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பில் மடக்கப்பட்டனர். 8 ஆயிரத்து 276 பேர் போக்குவரத்துக் குற்றங்களுக்காகச் சிக்கினர்.

போதைப் பாவனை, சட்டவிரோத மது தயாரிப்பு, விற்பனை போன்றவை சம்பந்தப்பட்டோரும் நீதிமன்றங்களுக்கு 'டிமிக்கி' கொடுத்தோருமே பெரும்பாலும் கைது செய்யப்பட்டனர்.

இந்தநடவடிக்கையில் பயிற்சி அளிக்கப்பட்ட 25 பொலிஸ் மோப்ப நாய்களும் பயன்படுத்தப்பட்டனவாம். (உ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விக்கப்பட்டனர்.

வெசாக் தினத்தில் நாடுமுழுவதிலும் 432 கைதிகளைப்பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்க ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இதில் யாழ்ப்பாணச் சிறைச் சாலையில் 6 பேர் மட்டும் விடுவிக்கப்பட்டனர்.

கசிப்பு வைத்திருந்த குற்றத்துக்காகத் தண்டனை பெற்ற 6 கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர். (ஐ)

## உணவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறிவித்துள்ளது.

வாழ்க்கைச் செலவு குறித்த அமைச்சரவையின் உபகுழுவின் பரிந்துரைக்கு அமைய கடந்த 27ஆம் திகதி எரிவாயுவின் விலை 245 ரூபாவினால் உயர்த்தப்பட்டது.

கடந்த 2017ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் எரிவாயுவின் விலை 110 ரூபாவினால் உயர்த்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 2014–2015 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பீடு செய்யும் போது சமையல் எரிவாயுவின் விலை குறைவாகவே காணப்படுகின்றது எனவும் எனவே, உணவுப்பொருள்களின் விலைகளை உயர்த்துவதற்கு இடமளிக்கப்படமாட்டாது எனவும் நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேசமயம், உலக சந்தையில் எரிவாயுவின் விலை குறைந்துள்ள நிலையில் இலங்கையில் அதன் விலை அதிகரிக்கப்பட்டிருப்பதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது. 2018 ஜனவரியில் உலக சந்தையில் ஒரு மெட்ரிக் தொன் எரிவாயுவின் விலை 590 அமெரிக்க டொலராக இருந்தது. இது தற்போது 470 அமெரிக்க டொலராகக் குறைவடைந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## நாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இயற்கைப் பேரழிவுகளால் விவசாயம் மற்றும் தொழில் துறைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளால் பொருளாதார வளர்ச்சி மந்தமானது.

2001 ஆண்டுக்குப் பின்னர் மிகக் குறைந்த பொருளாதார வளர்ச்சி பதிவாகியது 2017ஆம் ஆண்டில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

2001ஆம் ஆண்டு, போர் நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில், கட்டுநாயக்க விமான நிலையத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி விமானங்களை அழித்தமையாலும், சுற்றுலாத் துறை பாதிக்கப்பட்டதாலும், பொருளாதார வளர்ச்சி மோசமான நிலையில் இருந்தது.

## மதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எரிவாயுக்களின் விலைகள் 245 ரூபாவால் அதிகரிக்கப்பட்டமையினால் தாம் இந்தத் தீர்மானத்திற்கு வந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

உணவுப் பொருள்களின் விலைகள் தொடர்பில் அரசிடம் முறையான செயற்றிட்டங்கள் எதுவும் இல்லையெனவும், இதனால் உணவு மற்றும் மென்பானங்களின் விலைகளில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொத்து ரொட்டி உள்ளிட்ட சில உணவுப் பொருள்களின் விலையை அதிகரிக்குமாறு தாம் ஏற்கனவே இலங்கை ஹோட்டல் சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

மேலும், மரக்கறி உள்ளிட்ட சில பொருள்களின் விலைகளை கட்டுப்படுத்துவதில் அரசு தோல்வி கண்டுள்ளதாகவும் அசேல சம்பத் மேலும் தெரிவித்தார். (ஐ)

## கூட்டமைப்புத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

*"தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர்களுடன் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. தலைமைத்துவத்தின் அரசியல் செயற்திறன் போதுமானதல்ல என்று மட்டுமே நான் சுட்டிக்காட்டியிருந்தேன். அண்மைய தேர்தல் முடிவுகள் எனது அச்சத்தை நியாயப்படுத்தியுள்ளன.*

*"தலைமைத்துவம் கண்ணாடி முன் தம்மைப் பார்த்து சுயமதிப்பீடு செய்ய வேண்டும். அதன் பின்னர், நான் கூறியது சரியா, தவறா என்று முடிவு செய்ய முடியும்.*

*"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமைத்துவம் செயற்திறனுடன் இயங்காவிடின், அது நிச்சயமாகத் தமிழ்ச் சமூகத்தின் நலன்களைப் பாதிக்கும். இலங்கைத் தமிழர்கள் தமது தனித்துவத்தை எப்போதும் பேணிப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன்"* – என்றார். (ஐ)

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மத்திய செயற்குழு உறுப்பினர்களை அழைத்துத் தலைமைப் பதவியில் அமர்வதற்கு யாராவது விரும்புகிறார்களா என்று கட்சியின் தலைவரான ரணில் விக்ரமசிங்க கேட்டிருந்தார் எனவும், எனினும் அதற்கு எவரும் முன்வரவில்லை என்றும் அகில விராஜ் காரியவசம் மேலும் குறிப்பிட்டார். (ஐ)




# நடத்தை காரணமாகவே கம்பீர் நீக்கப்பட்டார்

இந்திய கிரிக்கெட் அணியில் முன்னணி வீரர்களில் ஒருவராக டில்லியைச் சேர்ந்த ஆரம்ப வீரர் கௌதம் கம்பீர் திகழ்ந்தார்.

இந்திய அணி 2007 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் உலகக் கிண்ணம் வெல்ல முக்கிய காரணமாக இருந்தவர். குறிப்பாக இறுதிப் போட்டிகளில் இவரது பங்களிப்பு அதிகம்.

இந்நிலையில், 2011ஆம் ஆண்டு இந்திய அணியின் இங்கிலாந்து சுற்றுப்பயணம் முதல் கௌதம் கம்பீர் இந்திய அணியில் இருந்து ஓரங் கட்டப்பட்டார். ஒரு கட்டத்தில் மகேந்திர சிங் டோனிக்கு அடுத்த இடத்தில் இருந்தவர், சில தொடர்களுக்குக் கப்டனாகவும் செயல்பட்டவர் இந்திய அணியில் இருந்து திடீரென நீக்கப்பட்டது அவரது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை அளித்தது.

அதுபோல ஐ.பி.எல். தொடர்களில் கொல்கத்தா அணியின் கப்டனாக செயல்பட்டு அந்த அணி இரு கிண்ணங்களை வெல்ல முக்கிய காரணமாக இருந்தார். பின்னர் 11- ஆவது சீசனில் அந்த அணியில் இருந்தும் நீக்கப்பட்டார். இதையடுத்து டில்லி அணிக்கு தேர்வான கம்பீர், தற்போது அந்த அணியின் கப்டன் பதவியில் இருந்தும் விலகி, தனக்கு அளிக்கப்பட்ட முழு ஊதியத்தையும் திருப்பி அளித்துவிட்டார். மேலும் டேர்டெவில்ஸ் ஆடும் லெவனிலும் கம்பீர் இடம்பெறவில்லை.

இது குறித்து இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தேர்வுக்குழுத் தலைவர் சந்தீப் பாட்டீல் கூறியவை வருமாறு:-

கௌதம் கம்பீர் இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்டதே அவரது நடத்தை காரணமாகத்தான். அவரது ஆத்திர நடத்தை நாளுக்கு நாள் அதிகரிக்கத் தொடங்கியது. இதனா லேயே அவரை இந்திய அணியின் அமிதாப் பச்சன் என்று நான் அழைத்தேன்.

2011ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற டெஸ்ட் தொடரின்போது பௌன்சர் பந்துவீச்சில் கம்பீருக்குக் காயம் ஏற்பட்டது. ஆனால் அந்தக் காயம் எளிதில் குணமடைந்து விடும், தொடர்ந்து விளையாடலாம் என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் அந்த காயத்தைக் காரணம் காட்டி கம்பீர் நாடு திரும்பினார்.

சுமார் 8 ஆண்டுகளாக என்னுடன் நல்ல நட்புடன் பழகிய கம்பீர், இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் அந்த நட்பை முடித்துக்கொண்டதாக தெரிவித்தார்.

முன்னதாக, கம்பீர் நீக்கத்துக்குப் பின்னர் இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய ஷிகர் தவான், முரளி விஜய், ரோஹித் ஷர்மா ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றமையால் அவரால் இந்திய அணியில் மீண்டும் இடம் பிடிக்க முடியவில்லை.




# மும்பையிடம் தோற்றாலும் கவலையில்லை

மும்பையில் நடந்த ஐ.பி.எல். போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை 8 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணி வென்றது. ஆனால், இந்தத் தோல்விக்குப் பின் அந்த அணியின் விக்கெட் காப்பாளருக்கு தேவையான ஆலோசனைகளை டோனி வழங்கியுள்ளார்.

மும்பையில் நேற்றுமுன்தினம் நடந்த ஐ.பி.எல். போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 169 ஓட்டங்கள் சேர்த்தது. இந்த இலக்கை விரட்டிய மும்பை இந்தியன்ஸ் அணி 2 பந்துகள் மீதமிருக்கையில் 2 விக்கெட்டுகள் மட்டுமே இழந்து இலக்கை அடைந்து வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியில் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்தவரும், 19 வயதுக்குட்பட்டோருக்கான அணியில் இடம் பெற்றிருந்தவருமான இஷான் கிஷான் விளையாடி வருகிறார். டோனியின் மாநிலத்தைச் சேர்ந்தவரான இஷான் கிஷான் விக்கெட் காப்பு நுணுக்கங்கள் குறித்து போட்டி முடிந்த பின் டோனியிடம் கேட்டார்.

எதிரணி வீரருக்கு எப்படி விக்கெட் காப்பு நுணுக்கங்களை கற்றுக் கொடுப்பது என்று முகம் சுளிக்காமல் இஷான் கிஷானுக்கு சொல்லிக் கொடுத்தார் டோனி. சில பந்துகள் விக்கெட் காப்புச் செய்தும் காண்பித்தார். ஏறக்குறைய 45 நிமிடங்கள் வரை இஷான் கிஷானுக்கு விக்கெட் காப்புச் செய்தல், ஸ்டம் பிங் செய்தல் உள்ளிட்ட பல் வேறு விடயங்கள் குறித்து டோனி விளக்கினார்.

இதை இஷான் கிஷான் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். 'விக்கெட் காப்பில் மிகச் சிறந்த மாஸ்டரிடம் இருந்து டிப்ஸ் பெற்றேன். ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த இரு விக்கெட் காப்பாளர்களுக்கான உறவு இது' என்று பதிவிட்டுள்ளார்.

# மீண்டும் வருகிறார் வேகப்புயல் மலிங்க

ஐ.பி.எல். கோலாகலமாக இடம்பெற்றுவரும் அதேசமயம் அடுத்த கட்டமாக இலங்கையில் சுப்பர் மாகாணக் கிரிக்கெட் தொடரின் 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடர் எதிர்வரும் மாதம் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை தேசிய அணி வீரர்களோடு உள்ளூர் கழகங்களுக்காக விளையாடிவரும் வீரர்களையும் உள்ளடக்கியதாக இந்தத் தொடர் நடைபெறவுள்ளது.

கொழும்பு, கண்டி, தம்புள்ளை மற்றும் காலி ஆகிய நான்கு அணிகள் குறித்த தொடரில் களம் காணவுள்ளன. இதில் தேசிய அணியின் முன்னணி வீரர்களோடு 80 உள்ளூர் கழக வீரர்களும் பங்கேற்கவுள்ளமை சிறப்பம்சமாகும்.

அதன்படி, கொழும்பு அணிக்கு தினேஷ் சந்திமாலும், கண்டி அணிக்கு அஞ்சலோ மத்தியூஸும், காலி அணிக்கு உபுல்தரங்கவும், தம்புள்ளை அணிக்கு குசல் ஜனித் பெரேராவும் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.




அதேசமயம் இலங்கை கிரிக்கெட் அணியில் தற்போது வாய்ப்புகள் குறைவடைந்திருக்கும் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான மலிங்க தம்புள்ள அணியில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச போட்டிகளில் களம் கண்ட அனுபவமிக்க வீரர்களுடன் இளம் வீரர்கள் விளையாடவுள்ளமையால் இலங்கையின் கிரிக்கெட் எதிர்காலத்துக்கு இந்தத் தொடர் முக்கியமான ஒன்றாக அமையும் என ரசிகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஐ

# சுப்பர் கிங்ஸ் வீரர் தீபக் காயம்

சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகளுக்கு எதிரான ஆட்டம் புனேயில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் மும்பை அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியின்போது சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வேகப்பந்துவீச்சாளர் தீபக் சாஹருக்கு காயம் ஏற்பட்டது. 24 வயதான தீபக் சாஹர், நடப்பு சீசனுக்கான ஐ.பி.எல். போட்டித் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியால் தேர்வு செய்யப்பட்டார்.

மேலும், நடப்பு தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் பங்கேற்ற 7 போட்டிகளிலும் விளையாடினார். நேர்த்தியான பந்து வீச்சை வெளிப்படுத்தி வந்த சாஹர், 6 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். சராசரி 23.17 ஆகும்.



தீபக் சாஹருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. காயம் தொடர்பான முழு விழிப்புணர்வு சாஹருக்கு இருந்ததால் தான் போட்டியின் போது அதைச் சரியான நேரத்தில் கணித்து, ஆட்டத்தில் இருந்து வெளியேறினார்.

அவரது காயம் குணமாக இரு வார காலம் ஓய்வு தேவைப்படுகிறது. இது சென்னை அணிக்கு மிகப் பெரிய இழப்பு என்று சென்னை சுப்பர் கிங்ஸ் தலைமைப் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளெமிங் தெரிவித்துள்ளார்.

Chennai Super Kings v Delhi Daredevils
இன்று
29.04.2018
இரவு 8.00 மணி

காலைக்கதிர் Kalaikkathir





















'டான்' தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் 7 ஆவது வருடமாக நடைபெற்ற 'புதிய விடியல்' வடக்கின் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தின் பரிசளிப்பு நேற்றுமுன்தினம் இரவு யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் மின்னொளியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இறுதி ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் அணியை எதிர்த்து விளையாடிய மயிலங்காடு ஞானமுருகன் வி.க. அணி 2:1 கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

'காலைக்கதிர்' நாளிதழ், ரொப்பாஸ், ரொப்பாஸ் மால் ஆகியவற்றின் அனுசரணையுடனும், சரவணா அச்சகம், BEES SPORTS ஆகியவற்றின் இணை அனுசரணையுடனும் இந்தச் சுற்றுப் போட்டி நடைபெற்றது. வெற்றிபெற்ற அணிகளுக்கும் வீரர்களுக்கும் பத்து லட்சம் ரூபா வரை பணப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

யாழ். மாநகர மேயர் இ.ஆனோல்ட், யாழ். நகரிலுள்ள 512ஆவது படைப் பிரிவின் தளபதி கேணல் சந்திரா ஜெயவீர ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.


# யாழ். நகரில் வெசாக் பந்தல் காட்சிகள்














இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.